உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௭] விக்கிரம ௵ ஆடி ௴ [பகுதி-௯.

Vol. 37. July—August 1940. No. 9.

கம்பராமாயண சாரம்.

[௩௬௬-ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாகபாசப்படலம்.

இந்திரசித்து இலக்குமணன் முதலியோரை நாகபாசத்தினாற் கட்டியதைக் கூறுவது.

இந்திரசித்து, அதிகாயன்முதலியோர் இறந்ததை அறிந்தது.

[இந்திரசித்து, இராக்கதமாதர் தலைவிரிகோலமாய் மார்பிலடித்துக்கொண்டு அழுவதைக் கண்டு, இராவணன் இரண்டாமுறை தோற்றானோ, ஒருகால் இறந்தேபோனானோ என்று கலங்கி, எதிரே கண்டவரை வினவினான். அவர்கள் ஒன்றுஞ் சொல்லமாட்டாமல் நடுங்குவதுகண்டு, (அழுகைக்குக் காரணம் இராவணன் தோல்வியோ சாவோவென்று தெரியத் தேரை இராவணன் அரண்மனைக்குச் செலுத்தி, அங்கே,) 'காட்டாதன காட்டிய தாதையைச் சென்று கண்டான்'.* கண்டவன், (அவன் உயிரோடிருக்கிறானென்று தெரிந்து) சிறிது துன்பம்நீங்கி 'ஊர்முழுதும் அழுகைக்குக் காரணம் யாது?' என, 'அதிகாயன் முதலிய உன் தம்பிமாரெல்லாரும் எமனுக் கிரையாகினர்' என்று இராவணன் கூறினான்.

---

* தாதை - தந்தை. காட்டாதனகாட்டிய—(1) 'இதுவரையில் ஒரு நாளுங் காட்டாத சோகக்குறிகளை (இப்பொழுது) காட்டிய' (2) 'தன்தலையைத் தானே கொய்து ஓமஞ்செய்தல் கைலாசமெடுத்தல் முதலாகப் பிறர்க்குச் செய்யமுடியாத அரும்பெருஞ் செயல்கள் பலவற்றைச் செய்துள்ள' வை. மு. கோ.

*

இந்திரசித்து சபதம்.

அதுகேட்ட இந்திரசித்து, கோபங்கொண்டு 'கொன்றவர் யார்?' என, இராவணன் 'அதிகாயனை இலக்குமணன் கொன்றான்; மற்றவர்களை அனுமான் முதலியோர் கொன்றனர்' என இந்திரசித்துக் கூறுகின்றான்.

'"கொன்றார் அவரோ? கொலைசூழ்கென நீ கொடுத்தாய்" கொல்லுங்கள் என்று சிறுவர்களை அவர்களிடம் அனுப்பிக் கொல்வித்தாய். அட்சயகுமாரனை அரைத்துக் கொன்ற அனுமனை (நான் கட்டிக்கொண்டுவந்து உன்முன் விட்டபோது, மதியீனத்தால் நீ உன் மகனைக் கொன்றவனென்று கொல்லாமல்) தூதன் என்று கொல்லாமல் விட்டாய். (அவனைக் கொன்றிருந்தால், அவன் நம் இருப்பிட முதலியவற்றை இராமனுக்குத் தெரிவித்தலும் கடலணை கட்டலும் இலங்கைப் படையெடுப்பும் நடந்திரா). கடந்துபோன தவறுகளைப்பற்றிப் பேசுதலாற் பயனில்லை. நான் அதிகாயனைக் கொன்ற இலக்குவனைக் கொன்றாலன்றி, இந்நகர்க்குத் திரும்பி வரேன். உயிர்வாழவுஞ் செய்யேன். அவனைக் கொல்லேனேல், எனக்கு ஒருமுறை தோற்ற இந்திரனுக்கு நான் நான்குமுறை தோற்றவனாவேன்; எனக்குப் பயந்து என் ஆணைகடவாத திருமால் முதலிய தேவர்களால் சிரிக்கப்படுவேனாவேன். இராவணன் மகனல்லனாவேன்.' என்று 'வில்லாளரை எண்ணில் விரற்குமுன் நிற்கும் வீரன்' ஆன இந்திரசித்து சபதஞ்செய்தான்.

அவன் அமர்க்களம் அடைதல்.

இராவணன், 'நீ போர்க்குப் புறப்படுவாயாக. என் துன்பத்தைத் துடைப்பாயாக. உன்னாலாகாதது ஒன்றுமில்லை.' என, இந்திரசித்து, அவனை வணங்கி விடைபெற்று, வாளை அரையிற் கட்டி, எதனாலும் துளைபடலும் அறுபடலும் கூடாத கவசம் அணிந்து, எழுகடலும் நீர் அற வறண்டாலும் அம்புகுறைபடாத அம்பறாத்தூணியை முதுகிற்கொண்டு, பிரமன், இந்திரனுக்கென

ன்குற்றமுமில்லாததாகப் படைத்துக்கொடுத்ததும் இந்திரனைப் போரில்வென்றபோது பிடுங்கிக்கொண்டதுமான வில்லைக் கையிற் பிடித்துப் போரில் தோற்ற தேவர்களிடம் பறித்தனவும் பிரமனும் பரமனும் அளித்தனவுமான பல படைக்கலங்களுட் சிறந்தவை களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, சிவனுடைய இடப ஊர்தியி னும் திருமாலுடைய கருடவாகனத்தினும் வேகமிகுத்ததாய், 'இந்திரன் தோள்களையிறுகக்கட்டிய பெருவீரன் வந்தான்' என்று பேராரவாரஞ்செய்யும் பேய்க்கொடியேறப் பெற்றதாய், வேறோ ரிலங்கையோ என்னும்படி வித்தாரமானதான தேரேறி, அத்தேர் போன்ற ஆயிரம் பெருந்தேர்கள் சேமத்தேர்களாகத் தொடர்ந்து வர, வெண்கொற்றக்குடை மேலே விளங்க, யுத்தவாத்தியங்கள் முழங்கச் சதுரங்கசேனை சூழ்ந்துவரப் போர்வெறி மீற, யுத்தகளம் புகுந்தான்.

விபீடணன் இந்திரசித்தின்வல்லமையை இலக்குமணனுக்குத் தெரிவித்தல்.

அப்போது, எதிரிகள் வருவதை எதிர்பார்த்துநின்ற இலக்கு மணன், 'அதோ! வருபவன் ஆர்' என, விபீடணன், 'பல பதி னாயிரம் தேவர்கள் பக்கபலமாகப்பெற்று எதிர்த்த தேவேந்திரனைச் செயித்து அவன் தோள்களைக் கயிற்றாற் கட்டியவன். அந்தக் கட்டினாலுண்டான காயங்கள், இன்னும் காணப்படுகின்றன. அனு மனைக் கட்டியவன் இவனே. இவன் வில்லின்வல்லமையைச் சொல்ல வல்லவரில்லை. இவனோடு செய்யும்போர் எளிதாயிராது. அனுமன், சுக்கிரீவன், அங்கதன், நீலன், சாம்பன் முதலிய தலைவர்களைத் துணையாகக்கொண்டு நீ போர்புரியவேண்டும்' என்று கூறினான்.

இருபடைகளும் எதிர்த்தல்.

எமனும் கண்ணைமூடச்செய்யும் பயங்கரமான இந்திரசித்தின் தோற்றத்தையும் துணிவையும் கண்டு, மேற்றிசைவாயிலினின்ற அனுமான் (அவன் தந்தையான) காற்றினும் கடுமையான வேகங் கொண்டு, மிகுவிரைவாகவந்து இலக்குமணன் நின்ற இடத்தை அணுகினான். அவன் வருதற்குமுன்பே, சுக்கிரீவன்முதலியோர் இலக்குமணனுக்குந் துணையாக வந்து சூழ்ந்துநின்றார்கள்.

இரண்டு பெருங்கடல்கள் எதிரெதிரான திசைகளினின்று வந்து ஒன்றோடொன்று போர்பொரவிரும்பி முழங்கினாற்போல, இருபுறப்படைகளும் எதிர்த்து வீர ஆரவாரஞ்செய்தன. அந்தப் பேரோசை, போர்ப்பறை சங்குகளின் முழக்கத்தோடுகூடி அந்தரத்தினின்று போர்காணும் புரந்தரன்முதலியோர் செவிகளைப் பொத்தச்செய்தது. வானர வீரர்களும் இராக்கத வீரர்களும் 'எற்றுங்கள் பற்றுங்கள்', என்றும் 'எறியுங்கள் எய்யுங்கள்' என்றும் கூறும் பேரொலி யுகாந்தகாலத்துப் பேரிடிமுழக்கத்திலும் பெரிதாயிருந்தது. கல்லும் மரமும் தாக்கப்பட்டிறந்த அரக்கர்பிணங்களையும், வேலும் அம்பும் தாக்க வீழ்ந்த வானரர்பிணங்களையும் சுமக்க மாட்டாமல் மண்முதுகு நெளிந்தது. (தலையிழந்த-உடற்குறையான) கவந்தங்கள் ஆடின. அவைகளின் அறுபட்ட கழுத்தினின்று பீறிட்டு மேலெழும் இரத்தக்காட்சி, சுட்டெரிக்கப்பட்ட மரத்தின் தூறின் உச்சியில் எரியும் சுவாலைத்தோற்றத்தை ஒத்தது. குரங்குகள் இராக்கதரைப்பிடித்துத் தோள்களை ஒடித்தும் கழுத்தைக் கடித்தும், காலைப்பிடித்து எடுத்துத் தரையில் அடித்தும் மடித்தன. அரக்கர், வானரங்களை வாளினால் தாளையும் தோளையும் தலையையும் உடலையும் துண்டித்துக் கொன்றனர். ஒரு குரங்கு, தன் மார்பூடுருவ வேலைப்பாய்ச்சிய இராக்கதனைக் கழுத்தைக் கடித்துக் கொல்ல, இரண்டுயிர்களும் ஒருங்குபிரிந்தன.

அனுமனும் அங்கதனும் அரக்கர்சேனையை அழித்தல்.

அனுமனும் அங்கதனும் அரக்கர்படையை அழிக்க, தேர் யானை குதிரை காலாள் எல்லாம் பிரித்தறியமுடியாதபடி சின்னபின்னமாய் இரத்தத்தோடு குழம்பிச் சேறாக, எமன், தான் கொண்டுபோகவேண்டிய உயிர்கள் எங்கெங்குள்ளனவென்று கண்டுபிடிக்க அந்தச் சேற்றைக் கிண்டிப்பார்க்கும்படி நேர்ந்தது. போர்க்களத்தைப் பார்த்துக்கொண்டிருந்த முனிவர்கள் இந்த வானர ராக்கத யுத்தத்துக்குத் தேவாசுரயுத்தமும் ஈடாகாதென்று கூறி வியந்தார்கள்.

மற்றைய வானரத் தலைவர் போர்த்திறமை.

(முதலில்) அரக்கர்படை மீறிக் குரங்குப்படையைப் பறக்கடித்தபோது, நீலன் குமுதன் இடபன் சாம்பவான் பனசன் மைந்தன் முதலிய வானரப்படைத்தலைவர்கள், ஓடிய வானரர்களைத் தடுத்து நிறுத்தித் தாம் நிலைபெயராதுநின்று பொருதபோது, தடுக்குமுன் ஓடிவிட்ட குரங்குகளும் திரும்பிவந்துசேர்ந்து பொருதன. அரக்கர்படை தளர்வுற்றது.*

இந்திரசித்தின் யுத்தம்

இராக்கதர்சேனை அழியக்கண்ட இந்திரசித்து, திசைகளெல்லாம் செவிடுபடும்படியான ஓசை உண்டாகும்படி வில்நாணைத் தெறித்துத் தேரை வானரசேனைக்கெதிரே செலுத்தி, அட்டமாநாகங்கள்போன்ற கொடிய அம்புகளையெய்து, வானரர் வீசிய மலைகளையும் மரங்களையும் தூளாக்கி, அவர் தலைகள் விண்ணின்மீது போய் விழுந்திடும்விசையால் மண்ணிலழுந்தும்படிசெய்தான். சில வானரர்கள், அவன்மீது எறிய எடுத்த மலைகள் கேடகமாக, அவைகளுள் மறைந்து மிக்க கெடுதிவிளைக்கும்படி கிட்டப்போய் எறிதற்காக, அவனைநோக்கிச் சென்றபோது, அவன்கணைகளால் அம்மலைகளோடு அவைகளால் மறைக்கப்பட்ட மார்புகளும் ஊடுருவப்பட்டு உயிர்துறந்தார்கள். அவன் அம்புகளால் ஒருவெள்ளம் வானர சைனியம் ஒரு முகூர்த்தகாலத்திலே கண்டதுண்டமாக்கப்பட்டதைக் கண்டு, கடுஞ்சினங்கொண்டு, அவன்மீது வீசுதற்குக் கைகளிற்கொண்ட மலைகளோடு மேலெழுந்து பாய்ந்துசென்ற வானரங்கள், அவன் அம்புகளால் அறுப்புண்ட தம் தலைகள் தாம்வீசிய மலைகளோடு தாமும் அவன்மேல் விழுந்தார்கள். இறந்தவர்களின் இரத்தப்பெருவெள்ளம், மேடுபள்ளந்தெரியாதபடி தரையை மூடிக் கடலை ஒத்தது. இந்திரசித்து எண்ணிறந்த அம்புகளை எய்ய, (அவைகள் செல்லாத இடம் இல்லாததானதனால்,) வானரர்கள்

---

* 'அனுமனும் அங்கதனும் அரக்கர்படையை அழித்தல்' என்ற தலைப்பின்கீழ் உள்ள பகுதியும் 'மற்றைய வானரத்தலைவர் போர்த்திறமை' என்ற தலைப்பின்கீழ் உள்ள பகுதியும் பின்முன்னாகக் கூறப்பட்டிருப்பதுபோலத் தோன்றுகிறது. இதன் காரணம் ஆராயத்தக்கது.

விழித்தால் விழிகளிலும், எதிர்த்துநின்றால் மார்பிலும், புறங்காட்டியோடினால் முதுகிலும், உயரப் பாய்ந்தால் உள்ளங்கால்களிலும், விலகித் தப்பமுயன்றால் மேனிமுழுவதினும், வீசினாற் கைகளிலும், அதட்டினால் நாவிலும், நினைத்தால் மனத்திலும், அந்தப்பாணங்கள் பாய்வன ஆயின. போர்நிகழ்ச்சி காண விண்மேல்நின்ற தேவர்கள், இந்திரசித்தின்யுத்தத்தில், முதலில் அவன் வில்நாண் தெறித்த ஓசையைக் கேட்டார்கள். முடிவில், இறந்த வானரர் பெருந்தொகையை எண்ணி விசனத்தால் கைகளைத் தலைமேலெடுத்துக்கொண்டு, இறவாது தப்பிய வானரர் ஓடுவதைக் கண்டார்கள். நடுவில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் (முதல் இடை கடைகளைப் பகுத்தறியமாட்டாதபடி மிக விரைவாக நிகழ்ந்ததனால்) ஒன்றையும் முறையாக அறிந்தார்களில்லை. (இந்திரசித்து அம்புகளை எடுத்தலும் தொடுத்தலும் விடுத்தலும் அவைகள் செல்லுதலும் குரங்குகளைக் கொல்லுதலும் ஆகியவை அனைத்தும் ஆச்சரியகரமாக அதித்துரிதமாக நிகழ்ந்தன என்றபடி.)

இந்திரசித்தைச் சுக்கிரீவன் எதிர்தல்.

வானரங்கள் சின்னபின்னமானது கண்டு, இந்திரசித்து அம்புகளெய்தலை நிறுத்தியபோது, தூரநின்ற சூரியபுத்திரனை சுக்கிரீவன் கண்டு, ஒரு மராமரத்தைக் கையிற்கொண்டு, சுழற்றி வீசி, இந்திரசித்தைக் கிட்டுதற்குத் தடையாக அவனைக் காத்துநின்ற இராக்கத சேனையை நிலைகுலையச்செய்து நெருங்கினான். அவனது வெற்றிச் செயலைக்கண்ட இந்திரசித்து அவன் நெற்றியில் இரண்டு பாணங்களும் நெஞ்சில் அஞ்சு பாணங்களும் அழுந்த எய்து, வேறுபாணங்களால் அவன் கையிலிருந்த மராமரத்தை நொய்ய தூள்களாக நொறுக்கினான்.

இந்திரசித்தை அனுமான் எதிர்தல்.

அப்போது, அனுமான் (சுக்கிரீவனது நிலைமையைக்கண்டு, அவனைக் காக்கக் கருதி, வெண்மேகம்) இடி இடித்துக்கொண்டு வந்தாற்போலத் தோள்கொட்டி ஆரவாரஞ்செய்துகொண்டுவந்து, 'இக்குன்று இக்கணத்திலேயே இந்திரசித்தைக் கொன்றுவிடும்'

என்று கண்டோர் சொல்லும்படியிருந்த குன்றமொன்றை இந்திர சித்தின்மேல் எறிந்தான். அவன் அந்த மலையை அம்புகளால் துண்டித்துத் தூளாக்கினான்.]

இந்திரசித்துக்கும் அனுமானுக்கும் வாக்குவாதம்.

122 நில்ல டா[1]சிறிது நில்ல டாவுனை நினைந்து வந்தனன் முனைக்குநான்
வில்லெ டாமைநின தாண்மை பேசியுயி ரோடு நின்றுவிளை யாடினாய்
கல்ல டா[2]நெடும ரங்க ளோவரு கருத்தி னேன்[3]வலி கடப்பவோ[4]
சொல்ல டா[5]வென வியம்பி னானிக லரக்க னையனிது[6] சொல்லினான்.

கொண்டுகூட்டு: இகல் அரக்கன் (-இந்திரசித்து), 'நில் அடா! சிறிது நில் அடா! நான் உன்னை நினைந்து (போர்) முனைக்கு வந்தனன். வில் எடாமை நினது ஆண்மை பேசி உயிரோடுநின்று விளையாடினாய். ஓ! கல் நெடுமரங்களோ, (உன்னைக் கொல்ல) வரு கருத்தினேன் வலிகடப்ப? சொல் அடா' என இயம்பினான். ஐயன் (-அனுமான்) இது சொல்லினான்.

பொருள்: (அப்போது,) இந்திரசித்து, (அனுமானை நோக்கி,) 'நில்லடா! சற்று நில்லடா! நான் உன்னை(க் கொல்ல) உத்தேசித்து இந்தப் போர்முனைக்கு வந்தேன். (நீ தப்பிப்போக விடேன். அக்கணத் தேய்த்தொழிந்த உன்னை அன்றே மாய்த்தொழித் திருக்கவேண்டும். செத்திருக்கவேண்டிய நீ, சாகாமல், போர்க் களத்திலே வில்லெடுக்காமல் "சூரம்பாயினும் வீரம் பேசேல்" என்ற முதுமொழிக் கெதிரிடையாக வெறுங்கையனாய்நின்று) வீரம்பேசிக்கொண்டு, (உன்னைக் கொல்வாரில்லாமையால்) உயிருட னிருந்து (ஆயுதங்கள்கொண்டு போராடாமல், கல்லும் மரமும் கொண்டு) விளையாடினாய். ஓ! கல்லும் மரமுமோ, அடா! உன்னைக் கொல்லக்கருதி வந்திருக்கிற என் வல்லமையை வெல்ல வல்லவை கள்? சொல்லடா!' என்று சொன்னான். அனுமான் பின்வரும் மறுமொழியைக் கூறினான்.

அடா, அண்மைவிளிப்பொருளில்வரும் இகழ்ச்சிக்குறிப்பிடைச்சொல். சிறிது, இங்கே சிறிதுநேரத்தைக் குறித்தது. முனை - போர்க்களம். வில் எடாமை - வில் எடுக்காமல். வருகருத்தினேன் வலி - (உன்னைக் கொல்லுங்) கருத்துடையேனாய் வந்திருக்கிற என் வல்லமை. கடத்தல் - வெல்லல்.

இயம்பு - சொல்லு; இகல் - பகை; போர்; வலி. இது—பின்வரும் பிரதியுத்தரம். ஐயன், இங்கே அநுமானைக் குறித்தது.

'ஓ! கல் மரங்களோ அடா' என இயைத்துப் பொருள் கூறப்பட்டது. 'ஓ!' 'கடப்பவோ' என்பதிலுள்ளது; 'மரங்களோ' என்பதில் ஓ, எதிர்மறைவினா, இடைச்சொல். 'கடப்பவோ' என்பதில் 'ஓ' இழிவுசிறப்புக்குறிப்பிடைச்சொல்.

பாடபேதம்: [1] நில்லெடா. [2] கல்லெடா. [3] மரங்களோடிரு கரத்தினேன், மரங்களோவிரு கரத்தினேன். [4] கடக்குமோ, கடக்கவோ. [5] சொல்லெடா. [6] இவை.

123 வில்லெ டுக்க[1]வுரி யார்கள் வெய்யசில[2]
வீர ரிங்குளர் மெல்லி யோய்[3]
கல்லெ டுக்கவுரி யானு நின்றன[4]ன
தின்று நாளையிடை காணலாம்[5]
எல்லெ டுத்தபடை[6] யிந்தி ராதிய
நுனக்கி டைந்து[7]யிர்கொ டேகுவார்[8]
புல்லெ டுத்தவர்க ளல்லம் வேறுசில[9]
போரெ டுத்தெதிர்[10] புகுந்துளேம்.

கொண்டுகூட்டு: 'இங்கும் வில் எடுக்க உரியார்கள் வெய்யசில வீரர் உளர். கல் எடுக்க உரியானும் நின்றனன். அது, இன்று நாளையிடை காணலாம். உனக்கு இடைந்து புல் எடுத்தவர் உயிர்கொடு ஏகுவார் (ஆகிய) எல்லெடுத்தபடை யிந்திராதியர் அல்லம். வேறுசில போர் எடுத்து எதிர் புகுந்துளேம்'

பொருள்: (அநுமான் இந்திரசித்தைநோக்கி, 'உங்கள்பக்கத்திற்போல) எங்கள்பக்கத்திலும் வில்லெடுக்க உரியவர்கள் சிலர் இருக்கின்றார்கள், கல்லெடுக்க உரியானும் இருக்கின்றனன், அதை (அந்தக் கல்லெடுப்பை)ச் சிலநாளில் காணலாம். உனக்குத் தோற்றுப் புல்லைக் கௌவியவராய் உயிர்கொண்டு (தப்பிப்)போனவரான தேவேந்திரன் முதலியோரல்லேம், யாங்கள். (அவர்கள் செய்ததினின்றும்) வேறான சிலவகைப் போர்செய்ய வந்திருக்கின்றோம்.'

வெய்ய - கொடிய. மெல்லியோய் - பலவீனனே - வலியற்றவனே. கல்லெடுப்பு-(1) பிரேதக்கிரியைகளில் இறந்தவர்க்கு அறிகுறியாக நட்ட கல்லை அந்தக் கிரியைமுடிவில் எடுத்துவிடுதல்: (கல்நடுதல், பாஷாணஸ்தாபனமென்றும், கல்லெடுத்தல், பாஷாணோத்துவாசனமென்றும் வழங்கும். பாஷாணம் - கல். ஸ்தாபனம் - நிலைநிறுத்துகை - நடுதல். உத்துவாசனம் - அகற்றுதல் - எடுத்துவிடுதல்.) (2) பகைவர்மேலெறிதற்கு மலைகளையெடுத்தல் (கல் - மலை). உரியான் - (1) உரியவன். (2) உரிய யான்; 'உரிய பொருள்', 'உரிப்பொருள்' என்றும், 'திருவருட்கு உரிய ஆன்றவர்', "திருவருட்குரியான்றவர்." (காஞ்சிப்பு. அவையடக்கம்) என்றும் வருதல் காண்க. இன்று நாளையிடை - இரண்டொருநாளில் - சிலநாளில். எல் - ஒளி. 'எடுத்தல்', எதுகையில் நிற்றல்பற்றி, 'உடைய' என்ற பொருள்கொள்ள நின்றது. படை - ஆயுதம். இந்திராதியர் - தேவேந்திரன் முதலானோர். இடைதல் - பின்வாங்குதல் - தோற்றல். நான்காம் அடியில் 'எடுத்தல்', எதுகையில் நிற்றலால், 'கௌவுதல்' என்ற பொருளுடையது. புல்லெடுத்தல், தோற்ற பகைவர், தாம் தோற்றதை வென்ற பகைவர்க்குத் தெரிவித்தற்கு அறிகுறியாகப் புல்லைக்கௌவுதல் பண்டைக்காலத்து மரபு. புல்லைக் கௌவியவரைக் கொல்லாது விட்டுவிடுதலும் மரபாயிருந்தது.

'நீர்வேறு, நிலம்வேறு' என்பதில், 'வேறு', வேறுபாட்டுப் பொருள் குறிக்கும். 'நீர் வேறு, நெருப்பு வேறு' என்பதிலோ, 'வேறு', 'திருவேறு, தெள்ளியராதலும் வேறு' என்பதிற்போல, வேறுபாடேயன்றி மாறுபாடுமான மறுதலைப்பொருள் குறிக்கும். இந்த மறுதலைப்பொருளையே, 'வேறுபோர்' என்பதில் உள்ள 'வேறு', குறிப்பதாகக்கொள்க. கொண்டு, 'உன்னோடு இந்திராதியர் பொருத தோல்விப்போருக்கு மறுதலையான வெற்றிப்போர் புரிய வந்திருக்கின்றோம்' என்பான் 'வேறுசில போரொடுத்தெதிர் புகுந்துளேம்' என்றான் என்க.

வில்லெடுக்காமல் கல்லெடுத்துப் போர்புரிகின்றாய் என்றதற்கு எதிரிடையாக, வில்லெடுக்கவுரியார் எங்கள்பக்கத்திலும் இருக்கின்றார்களென்றான். எங்கள்பக்கத்து வில்வீரர் உங்கள்பக்கத்து வில்வீரரிலும் கொடுமையாகப் போர்புரிவா ரென்பான், வெய்ய வீரரென்றான். 'சிலர்' என்பது இருவரையும் இருவருக்கு அதிகமானவரையும் குறிக்கும். வில்வீரர் இராமலக்குமணரிருவரே உளராக,

பாட்டோசைக்குப் பழுதின்றி 'இருவீர' ரென்னாது 'சிலவீர' ரென்றது, இருவரினும் எண் மிகுந்தவரென்று பெருக்கமாகத் தோன்றுதற்காக எனலாம்.

இவ்வாறு சுருக்கம் பெருக்கமாகத் தோன்றக் கூறியவன், பெருக்கம் சுருக்கமாகத்தோன்ற, இரண்டுக்கதிகமான நாள்கள் கழித்து நிகழ்வதாகிய கல்லெடுப்பு, இரண்டுநாளுக்குள் நிகழக் காணலாமென்ற பொருள்பட, 'அது இன்று நாளையிடை காணலாம்' என்றான். உங்கள்பக்கத்து வில்வீரர் பலராக, எங்கள்பக்கத்து வில்வீரர் சிலராயினும், உங்களவர், தொகைமிகுந்த யானைகள் போல்வர், எங்களவர், தொகைகுறைந்த சிங்கங்கள்போல்பவரென்பான் வெய்யசிலவீரர் என்றானெனலுமாம்.

நீ இந்திரனைச் செயித்து 'இந்திரசித்து' எனப் பெயர் சிறந்த பிரபல பலாட்டியனாயினும் எங்கள் வில்வீரருடன் ஒப்பிட்டால், பலவீனனே என்பான் 'மெல்லியோய்' என்றான்.

'வீரர்போல வில்லைக்கொண்டு போர்புரியாமல் சிறுபிள்ளைகள் போலக் கல்லைக்கொண்டு சண்டையிடும்பாவனைசெய்து விளையாடுகின்றாயே' என்று இந்திரசித்து இகழ்ச்சியாக ஏளனஞ்செய்ததற்கெதிராக, அவனை அவமானப்படுத்த, அநுமான், 'எங்கள்பக்கத்தில் உங்களைக்கொல்ல வில்லெடுப்பவர்களும் இருக்கிறார்கள்; அவர்களாற் கொல்லப்பட்டு நீங்கள் மாண்டபின் உங்களுக்குத் தாயாதியாய்ச் சவச்சடங்கு (பிரேதக்கிரியை) செய்து, கல்லெடுக்கவுரியவனும் (விபீடணனும்) இருக்கின்றான்' என்று கூறினான் என்பதே 'கல்லெடுக்கவுரியானும் நின்றனன்' என்பதற்கு இயல்பானபொருள். சவச்சடங்கு சம்பந்தமான கல்லெடுத்தல், குறித்த பொருளாகவும், போர்த்தொழில் சம்பந்தமான கல் (மலை) எடுத்தல், தொனித்தபொருளாகவும் கொள்ளல்வேண்டும். தொனியைச் சிலேடையாக்குதற்பொருட்டுக் 'கல்லெடுக்கவுரியானும் நின்றனன்' என்பதற்குக் 'கல்லெடுக்க உரிய (அநுமானை) யானும் நின்றனன்' என்று சிலர் உரையெழுதியிருக்கின்றனர்*. இயல்பாக 'உரியான்'

* இவர்கள் உரைக்குப் பொருத்தமாக இந்த விசேடவுரைக்கு முந்திய குறிப்புரையில் 'உரியானும்' என்பதற்குப் பொருள்வரையப்பட்டிருத்தல் காண்க.

'என்பது படர்க்கையெழுவாயாகவும் 'நின்றனன்' என்பது படர்க்கைப்பயனிலையாகவும் இருக்கின்றன. அப்படியிருக்க, அந்த 'உரியான்' 'நின்றனன்' என்பவைகளைத் தன்மையெழுவாயும் பயனிலையுமாகக்கொள்ளல், இயல்பல்லாதது. அன்றியும், 'அது, (கல்லெடுப்பு) இன்று நாளையிடை காணலாம்' என்றதனால், கல்லெடுப்பு; போர் ஆரம்பம்முதல் நிகழ்வதாகிய மலையெடுப்பைக் குறியாமல் சவச்சடங்காகிய கல்லெடுப்பைக்குறிப்பது தெளிவு. அன்றி, இராமசேனையில், இராமலக்குமணரிருவரல்லாத எல்லாரும் கல்லாற் போர்செய்பவராயிருக்க, கற்போர்புரிபவன் ஒருவனே இருப்பது போலக் 'கல்லெடுக்கவுரியானும் நின்றனன்' என்றது பொருத்தமற்றதாகத் தோன்றுகின்றது.

சொல்லணியைச்சேர்ந்த சிலேடையைப்பற்றிக் கூறும்படி நேர்ந்த இங்கே, பொருளணி சொல்லணியென்ற இருவகையணிகளைப் பற்றியுள்ள கருத்துவேற்றுமையை விளக்குவது தகுதியாகத் தோன்றுகின்றது.

ஒருபாட்டு, பொருளணியுடையதாகவிருந்தாலும், சொல்லணியுடையதாகவிருந்தாலும், அது பொருத்தமுள்ளதாயிருந்தால், கொள்ளப்படல்வேண்டும்; பொருத்தமில்லதாயிருந்தால், தள்ளப்படல்வேண்டும். அவ்வாறன்றி, ஏறக்குறைய இரண்டு தலைமுறைக் காலமாக, பல ஆங்கிலங்கற்ற தமிழறிஞரும் அவரைப் பின்பற்றும் சில தனித்தமிழ் மாணவரும் இது பொருத்தமுள்ளதா? இல்லதா? என்று ஆராயாமலே சொல்லணியுள்ள எந்தப்பாட்டையும் வெறுத்துத் தள்ளிவிடுகின்றனர்.

இந்த 'வில்லெடுக்க' என்றபாட்டில் சொல்லணியான சிலேடையிருப்பதாகக் கூறி விளக்கிய ஒருவர், அம்மட்டில் நில்லாமல், 'நல்ல கவிதைக்கு ராஜபிளவைபோன்ற சிலேடை' என்று கூறியிருப்பது, மேலே கூறியதற்கு ஓர் உதாரணமாகும்.

இங்கே, சொல்லணிபற்றி மனோன்மணீய நூலாசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் சொன்னது நினைவுக்கு வருகின்றது. அதன் விவரமாவது:—

ஒருசமயம், சாரற்காலத்தில் திருவனந்தபுரத்திலிருந்துவந்து குற்றாலத்தில் வசித்துக்கொண்டிருந்த மேற்குறித்த பிள்ளையவர்களைப் பார்க்கப்போனேன். அப்போது, அவர்களோடு திருநெல்வேலியன்றி வேறு ஜில்லாக்களிலுமிருந்து சாரலுக்காக வந்திருந்த பெரிய உத்தியோகத்தர்களும் பிரபல வக்கீல்களுமாகப் பலர் இருந்தார்கள். அவர்களுக்கு என்னை அறிமுகஞ்செய்வித்து, நெல்லைச் சிலேடைவெண்பாவில், சில பாட்டுக்களைச்சொல்லிப் பொருள்கூறும்படி பிள்ளையவர்கள் சொன்னார்கள். அப்போது, அவர்கள், தம்மோடிருந்தவர்களைநோக்கி, 'நமக்கெல்லாம் ஆங்கிலம் பயிற்றிய ஆங்கிலேய ஆசிரியர்கள், ஆங்கிலத்தில் இருபொருள்படக் கூறுவதாகிய "பன்" (Pun) என்பது ஒதுக்குதற்குரியதெனக் கற்பித்திருக்கிறார்கள். அது காரணமாக, ஆங்கிலங்கற்ற நம்மவர்கள், சிலேடையையும் அதுபோலச் சொல்லணிவகைகளான திரிபு மடக்குக்களையும் வெறுத்துப் புறக்கணிக்கின்றார்கள். இவைகள், ஆங்கிலப் "பன்" போல்வன அல்லனவாய்த்தம்மை ஆக்கியோரது ஆற்றலை உணர்த்தி, அதிசயம் விளைத்து, இன்பம் அளிப்பனவாயிருக்கின்றன. நெல்லைச் சிலேடைவெண்பா, சிலேடை திரிபு மடக்குக்களால் அமைக்கப்பெற்றது.' என்ற கருத்துப்படக் கூறினார்கள்.

பாடபேதம்: [1] எடுக்கவும். [2] உரித்தெமையர் சிலர், உரித்தெமைய சில, உரியார்களெம்மையார், உரியார்களைய சில. [3] மெல்லியோங். [4] உரியோமு நின்றனம். [5] காண்கலாம். [6] பதி. [7] உடைந்து. [8] ஏகினர்; ஏகுநாட். [9] வென்றுசில. [10] எடுத்திடை.

['என்னுடனேயோ, இலக்குமணப்பெருமானுடனேயோ, இராமபிரானுடனேதானோ, யாருடனே உனக்குப் போர்புரிய விருப்பமோ, அதைச் சொல்லு. எதைச்சொன்னாலும் மறுக்கமாட்டோம்' என்றான் (அனுமான்).

இந்திரசித்து, 'நீ பெருமானென்று பெருமைப்படுத்திக் கூறிய அறிவிலி எங்கே நிற்கின்றான்? என் அருமைத்தம்பி அதிகாயனுடைய உயிரைப் பறித்துத் தன் உயிரை நான் பறித்தற்கு வைத்துக்கொண்டிருக்கும் அந்த அற்பன் எங்கே நிற்கின்றானோ,

அங்கே சென்று, அவனைக் கொன்று, எனது சினத்தைத் தணிக்க வந்திருக்கின்றேன். என் படைவீரரொருவரையும் துணையாகக் கொள்ளாமல், எல்லாரையும் விலக்கிவிட்டு, நான் ஒருவனே தனியனாய், என் வில் அல்லது வேறு துணை யாதுமில்லாமல் போர்புரிந்து உங்கள் கூட்டமுழுவதையும் கொல்லுவேன். (நீயும் இராமலக்குமணரும் ஆகிய மூவர்களுள் யாவரொருவரும் என்னோடு பொருதற்குச் சித்தமாயிருப்பதாகவன்றோ செப்பினாய். நீங்கள் மூவருமே வாருங்கள்.) உங்களுடனே மண்ணிலுள்ளவர்களேயன்றி விண்ணிலுள்ளவர்களையும் சேர்த்துக்கொண்டு வாருங்கள். எல்லாரையும் ஒருசேர இந்த ஒரு பகற்பொழுதிலேயே வெல்லுவேன். வென்றாலன்றிப் போர்க்களத்தைவிட்டுப் போகேன்' என்று கூறி அனுமான் உடம்புள் அழுந்தும்படி தொள்ளாயிரம் அம்புகளை வில்லில் தொடுத்து விடுத்தான். அவை, அவன் உடம்பூடுருவ, அவன், பற்களைக் கடித்துச் சீறி, ஒரு மலையை யெடுத்து, 'நீ, இலக்குமணன் வருமளவும் பொறுக்காமல் என்னை அம்பெய்து வருத்தினாய்; இனி, நீ அம்பெய்யுமுன், உன்னை இந்த மலை கொன்றுவிடும், கூடுமானால் காத்துக்கொள்ளடா' என்று கூறி, அம்மலையை இந்திரசித்தின்மேல் எறிந்தான். அது, அவன் மார்பில் தாக்கி வச்சிர மலையைத் தாக்கினாற்போல, இடிந்து பொடிந்துபோயிற்று. அப்போது, இந்திரசித்து, அனுமான் மார்பூடும் தோளூடும் உருவும்படி ஆயிரங்கணைகளெய்தான். அனுமான், உடம்பினின்று இரத்த வெள்ளம் பெருக, நிலைகுலைந்து சோர்வுற்றான். அவன் சோர்வு தீருதற்குமுன், நீலன் வந்து, இந்திரசித்தை எதிர்த்து, ஒருமலையை எறிய அதனை அவன் அம்பெய்து துண்டுபடச்செய்து, நீலன் மேனிமுழுதும் சல்லடைக்கண்களாகத் துளைத்து, இரத்தம் சுரக்கச் செய்தான். இறவாது உயிரோடிருந்த வானரங்களெல்லாம் ஓட்டமெடுத்தன. நீலன் சோர்வுறவே, அங்கதன் வந்து, கண்டவர்கள் ஒருசிலர் 'இது மேரு, இது மேரு' என்று சொல்ல, வேறுசிலர் 'மேருவல்ல மேருவல்ல' என்று சொல்ல, ஒரு மலைக்குப்பின் ஒரு மலையாகப் பெருமலைகள் பலவற்றைப் பிடுங்கி இந்திரசித்தின் மார்பின்மேலும் தோளின்மேலும் விசைத்து வீசியெறிந்தான்.

அவன், கையில் வில்லிருக்க, அம்மலைகள் அவனுடலை அடையுமா? அடைவது கிடக்க, அவன் எதிரேதான் செல்லுமா? சென்றாலும், (அம்புகளால் தாக்குண்டு பின்னுகப்) பெயர்ந்துவிடுவனவேயா மென்று சொல்லவேண்டுமோ? அவன் அம்பெய்து அவைகளை, அவைகளின் துண்டுகளைக் கண்டுகொள்ளாதபடி தூள்களாக்கினான். ஆக்கி, அங்கதன் நெற்றியிலும் தோளிலும் மார்பிலும் காலிலும், புற்றுள் நுழையும் சர்ப்பம்போல நுழையும்படி, பற்பல கணைகளை எய்தான். அங்கதன், ஒன்றுஞ் செய்யமுடியாமல் கைகளைப் பிசைந்து, கோபத்தினால் கண்கள் தீப்பொறி சிந்தத் தேகம் செந்நீர் சோர, மயங்கி மண்ணில் விழுந்தான். இந்திரசித்து, மற்றைய வானரவீரர்கள் மார்பிலும் தோளிலும் அழுந்தும்படி மழைமாரிபோலக் கணைமாரியைப் பெருவாரியாகச் சொரிந்தான். அப்போது, இலக்குமணன் விபீடணனைநோக்கிக் கூறுவானுனான்.

இலக்குமண விபீடண சம்வாதம்.

'படைவீரர் துணையோடு இந்திரசித்தை எதிர்க்கவேண்டுமென்ற உன் கொள்கை தவறாக முடிந்தது. நான் அவனைத் தனியே பொருது கொன்றிருந்தால், நம் படைத்தலைவரின் உலைவும் படைகளின் குறைவும் நேர்ந்திரா' என்று இலக்குமணன் கூற, 'ஆம், அப்படியே' என ஒப்புக்கொண்டு, விபீடணன், 'நீ கூறியது உண்மையே. பலகோடிதேவர்கள் ஒருசேர வந்து எதிர்த்தும் இவனை யாதுஞ் செய்ய இயலாதவராயினர். இவனை நீ ஒழித்தாலன்றி உலகத்துள்ளார் உய்யும் உபாயம் ஒன்றுமில்லை' என்று கூறினான்.*

---

* 'பதினான்குவருஷம் நித்திரையின்றியிருந்த ஒருவனாலன்றி மற்று எவராலும் கொல்லமுடியாதபடி வரம்பெற்றிருந்த இந்திரசித்தை, அங்ஙனமே வனத்தில் இராமபிரானுக்குப் பாதுகாவலாகும்பொருட்டுத் துயிலின்றியிருந்த இலக்குமணனே கொல்லவல்லவனென்பான், "நீ இது தீர்ப்பினல்லால், உய்திறனுண்டோவேறிவ்வுலகினுக்குயிரோடு" என்றான். வை.மு.கோ.

இலக்குமணன் இந்திரசித்தின் எதிரே ஏகுதல்.

அதுகேட்டு, இந்திரசித்தைநோக்கிச் சென்ற இலக்குமணனை, அவன் பார்த்து, 'அதோ! இந்திரவில்லோடுகூடிய பொன்மேகம் போல வருகின்றானே, அவன் பரதன் தமயனுக்கு (இராமனுக்கு)ப் பெரியதம்பியா? (இலக்குமணனா?)' என்று பக்கத்தில்நின்ற தூதனைக் கேட்க, அவன் ஆமென்றான்.

இராக்கதசேனைத்தலைவர் இலக்குமணனை எதிர்த்தல்.

அப்போது, இராக்கதசேனாபதிகள், 'நம் தலைவனுக்குமுந்தி இவனை நாம் எதிர்ப்போம்' என்று சொல்லிக்கொண்டு சென்று, இலக்குமணனைநோக்கி, 'எங்கள் இறைவன் இராவணேசுரன் அருமைக்குமாரன் அதிகாயனைக் கொன்றவனே! நாங்கள் காண வந்து அகப்பட்டுக்கொண்டாய். இனித் தப்பிப் பிழைக்கமாட்டாய்' என்றுகூறி, நூறுகோடிக்கணக்காகத் தேர்ப்படைகளையும் யானைப் படைகளையும் குதிரைப்படைகளையும் காலாட்படைகளையும் செலுத்தி, ஆரவாரித்து, இலக்குமணனை வளைந்து, கவிந்தனர். அவன், அவர்கள்மேல் எய்த அம்புகளின் உக்கிரத்தால் உலகம் அதிர்ந்தது; மலைகள் பிளந்தன; பிணங்கள் குவிந்தன; இரத்த வெள்ளம் புரண்டது. இலக்குமணன் கையில் பொழியும் கணை மாரியைக் கண்ட தேவர்கள், 'மழைமாரிபெய்தலை மேகங்கள் இலக்குமணன்வில்லினிடம் கற்றனவோ' என்று வியந்து கூறினார்கள்.

படுகளச் சிறப்பு.

வேகத்தை மிகுவித்தற்கு இறகுகளுடையனவாக அமைக்கப் பெற்ற அம்புகள் தாம் தைத்துக் கொன்ற இராக்கதரின் பிணங் களிற் பதிந்திருப்பவை, தின்னுதற்காகப் பிணங்களை அலகினாற் குத்திக்கொண்டிருக்கும் பறவைகளைப் போன்றன. இந்திரசித்தி னாற் கொல்லப்பட்டு, எழுபதுவெள்ளமென்னும் மொத்தத் தொகையிற் பாதிக்குமேலாகப் பட்டுக்கிடந்த குரங்குப்படைப் பிணங்கள், அரக்கப்படைப்பிணங்களால் மறைக்கப்பட்டன.

இராக்கதசேனையின் தேர்களும் யானைகளும் குதிரைகளும் அழிந்தன. இராக்கதவீரர் கையற்றும், காலற்றும் கண்ணற்றும் கழுத்தற்றும் மாண்டார்கள். இறவாது உயிரோடிருந்தவர்கள் நிலைகுலைந்து ஓடிப்போனார்கள்.

நீர்வற்றிய கடலில் நிற்கும் மலைபோலப் படையொழிந்த போர்க்களத்திலே, தனிப்பட்டுநின்ற இந்திரசித்து, தன்னைக் காத்துள்ளார் எல்லாரும் இறந்ததுகண்டு, கோபமும் தாபமும் கொண்டு, இலக்குமணனை எதிர்க்க நெருங்கினான். அப்போது, அனுமான் வந்து வணங்கி 'என்தோள்மேலேறுக' என, இலக்குமணன் ஏறினான்.

இந்திரசித்தும் இலக்குமணனும் பொருதல்.

இந்திரசித்தும் இலக்குமணனும் எதிர்த்துப் போர்புரியப் புகுந்தார்கள். இருவர் வில்நாண்களும் இடித்தன; அதனால், திசைகள் தீப்பிடித்தன. மலைகள் வெடித்தன. இருவர் அம்புகளும் ஒன்றையொன்று கடித்தன, அறுத்தன, எரித்தன. உம்பர்கள் ஒடுங்கினர்; உலகம் நடுங்கினது. இருவர் ஊர்திகளும் (இரதமும் அனுமனும்) இடசாரி வலசாரியாகப் பலசாரி சுழல்வதால் இலங்கையே சுழல்வதுபோன்றது. 'இவ்விருவருடைய விற்கலைப்பயிற்சிகள் பற்பலவகையிற் சிறந்தன. இவர்கள் உடல்வலிக்கு அளவில்லை. 'இவர்கள்போரைக் காண்போம்' என்று எண்ணிவந்து, விண்ணினின்று பார்த்த தேவர்கள், இருவரும்புரியும் விற்றொழில்விரைவினால், அத்தொழிலை வரன்முறையாகக் காணமாட்டாமல், 'என் செய்தார் என்செய்தார்' என்றியம்புவார், 'இனையதன்மை முன்செய்தார் யாவர்?' என்பார். 'முன்னேது? பின்னேது?' என்பார்.* ஆகினர்.

---

* யாது செய்தார்கள்? யாது செய்தார்கள்? (இவர்கள் செய்தொழில் விரைவினால், இன்னது செய்தார்கள் என்று தெரியமுடியவில்லையே!) என்று சொல்வார்கள். இப்படிப்பட்ட விற்போரை இதற்குமுன் செய்தார் யார்? (ஒருவருமில்லை) என்பார். (இப்படிப்பட்ட விற்போர்) முன் (நிகழ்ந்த போர்களுள்) யாது? (ஒன்றுமில்லை) பின் (நிகழும் போர்களுள்) யாது? (எதுவும் இராது) என்று கூறுவார் (ஆகினர், தேவர்கள்). இனையதன்மை - இப்படிப்பட்டதன்மை; ஆகுபெயராய் இப்படிப்பட்ட தன்மையுடைய போரைக்குறித்தது. ஏது - யாது; இன்மைப்பொருளுடையது. முன் ஏது, பின் ஏது - முன்னுமில்லை; பின்னுமில்லை.

இந்திரசித்து, பல்லம் என்ற பாணங்களை ஆயிரகோடிக்கணக்காக எய்தான். அவைகளை இலக்குமணன் ஆயிரகோடி பல்லங்களால் அறுத்தான். இவ்வாறே இந்திரசித்து, நாகக்கணை, கங்கபத்திரம் அர்த்தசந்திரபாணம் முதலிய பலபாணவிசேடங்களைக் கோடிகோடியாக எய்தான். இலக்குமணன் அவ்வப் பாணவிசேடங்களை, அவ்வப்பாணவிசேடங்கள் அவ்வத்தொகையுடையவற்றால் அறுத்தான். ஒருவர்மேல் ஒருவர் எய்த அம்புகளும், தம்மேல் எய்த அம்புகள் தம்மைத்தாக்காது தடுக்க,இருவரும் எய்த அம்புகளும் எங்கும் நெருங்க, உலகமுழுதும் அம்புக்காடாகத் தோன்றியது. இந்திரசித்து, அனுமான்தோளில் ஆயிரம் அம்புகளும் இலக்குமணன் கவசத்தில் ஆயிரத்துநானூறம்புகளும் எய்தான். (இதுவரை இருவர் அம்புகளும் ஒன்றையொன்று தாக்கினவேயன்றி இருவருள் ஒருவரும் தாக்கப்படவில்லை. ஊர்தி முதலியன ஒன்றும் ஊறுபடுத்தப்படவுமில்லை. இப்போது, இந்திரசித்து இலக்குமணன்கவசத்திலன்றி அனுமான் தோளிலும் பட அம்பெய்ததனால்) இந்திரசித்து முந்திக்கொண்டான் என்று தேவர்கள் (வருத்தத்தோடு கண்டு அக்காட்சியை மேற்கொண்டு காணாதபடி) முகத்தை முதுகுப்புறமாகத் திருப்பிக்கொண்டார்கள். (போரைப் பார்த்துக்கொண்டிருந்த) முனிவர்கள் இந்திரசித்தின் அம்புகள் தைத்து மலைவீழருவிபோல, அனுமன் தோளிலிருந்து ஒழுகும் இரத்தவெள்ளத்தைக் கண்டு, '(விற்பிடித்தவருள்) இவனே வில்லாளியெனத் தக்கா'னென்று வியந்துகூறித் (தம்பக்கம் தோல்விநேருமென்று) துணுக்குற்றார்கள். அப்போது, (அவர்கள் அச்சம் நீங்கும்படி) இலக்குமணன், நூறுநூறாக அம்புகள் எய்து இந்திரசித்தின் தேரிற்கட்டிய சிங்கங்களையும் வீரக்கொடியையும் தேர்ப்பாகனையும் அறுத்து வீழ்த்தி, ஆறுநூறு அம்புகளை, அவன் கவசத்துள் நுழைந்து உடலுக்குள் அழுந்த எய்தான். அம்பு துளைத்த துளைகளெல்லாவற்றிலுமிருந்து, பவளக்கொடிகள்போல இரத்தம் ஒழுகியது.

இந்திரசித்து, இலக்குமணனது விற்றொழில்திறமையைக் கண்டு, வியப்புமிகுந்ததனால், தன் தேர்ச்சிங்கங்களும் கொடிகளும் சாரதியும் அறுபட்டுவிழுந்ததும் தன் உடம்பெங்கும் உதிரம்

ஒழுகுவதும் உணரானாய், 'இவன் (இலக்குமணன்), முன், திருமால் ஒருவனே சீடனும் குருவுமாக இருவரான நரநாரண ரென்பாருள்) நரன் ஒப்பான், அன்றேல் நாரணன் ஒப்பான், அன்றேல் பரமன் அல்லது பிரமனையொப்பான் என்னலாம்.

⟨ "நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின், நீங்கின் அதனைப் பிற" என்றபடி எல்லாரும் தம் நிலத்தில் வலியர் என்பதற்கு மாறாக, சாதாரணமனிதனான இவ்விலக்குமணன் தன்னிடத்தைவிட்டு மிக்க கொடியரும் மகாசூரரும் அரக்கருமாயுள்ள மாற்றாராகிய நமது ஊரில்வந்து சலியாது எதிர்நின்று பொருது வெல்லுவதே! இவனது வில்வீரம் இருந்தபடி என்!! ⟩ என்று இலக்குமணனைப் பாராட்டினான்.

பாராட்டியவன், (தான் செய்யவேண்டியதைப்பற்றிய நினைவு வர,) கோபாவேசங்கொண்டு, வேறோர் தேரேறி (உகாந்தகாலத்தில் உலகையெல்லாம் ஒழிக்கும்) உருத்திரமூர்த்தியும் உடல் நடுங்க ஆயிரகோடி அம்புகளை எய்து, ஆகாயம் அம்புமயமாய் வெற்றிடம் இல்லாததாம்படி செய்தான். இலக்குமணன் அந்த ஆயிரகோடி அம்புகளையும் ஆயிரகோடி அம்புகளால் அறுத்து, மேலாக ஆயிரம் அம்புகளை இந்திரசித்தின் மேனிமேல் ஏவினான். இவன், அவன் நெற்றியில் நூறுகணை எய்தான். அவன், நூறம்புகள் தாக்கியும் ஓரம்பும் தாக்காதவன்போன்று, இவன் மார்பில் நூறம்புகளை எய்தான்.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

⟨ ⟩ இக்குறிகளுக்கிடையில் உள்ளது வை. மு. கோ. விசேடவுரை.

ஸ்ரீ:

த்ர(யா)ராநகராவேந்தன் போஜதேவன் இயற்றிய

ஸரஸ்வதீகண்டாபரணம்.

(கலைமகள்கழுத்தணி)

[௩௫௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

12. சந்திக்தம்.

யந்நிஶ்சயக்ஷேபார்த்தம் ஸந்திக்தம் தத்குணீ பவேத் ।
ஸசேத் விஶேஷாவகமோ யதி ப்ரகரணாதிபி: ॥ ௧௦௧ ॥

(பொருளைத் துணியவியலாது) ஐயத்தை விளைக்கும் சொல் வழக்கு 'ஸந்திக்தம்' என்னும் குற்றமுள்ளதென்று முன்பு கூறப்பட்டதாயினும், இடமுதலியவற்றால் ஐயநீங்கக்கிடப்பின் அது குணமாம்.

உதாரணம்:—

மஹீப்ருத: புத்ரவதோऽபி த்ருஷ்டி
ஸ்தஸ்மிந்நபத்யே ந ஜகாம த்ருப்திம் ।

இமவான் புதல்வனைப்பெற்றிருந்தும் அவனுடையகண் அக்குழந்தையிடத்தில் திருத்தியடையவில்லை.

இங்கே குழந்தை என்ற பொதுச்சொல் ஆண் பெண் இரண்டற்கும் பொதுவாய் ஐயம்விளைப்பதேயாயினும் இங்கே, புதல்வனைப்பெற்றிருந்தவனாக இமவானைக் குறித்துவிட்டமையால் குழந்தை என்பது அதனின் வேறாய பெண்ணென்றே விளங்குதலாற் 'சந்திக்தம்' என்னும் குற்றமாகாது, குணமாம்.

13. விருத்தம்.

யத்ர விருத்தம் த்ருஷ்டம் விபரீதப்ரகல்பநம் ।
ததா ஸம்தாதியாநேந குணத்வம் ப்ரதிபத்யதே ॥

ஒன்றுக்கொன்று முரணான பொருள்தோன்றுமாறு கூறின் அது 'விருத்தம்' என்னும் குற்றமாமென்று முன்புகூறப்பட்டது; ஆயினும், அவ்வாறு கூறியவிடத்தும் பொருள் தெளியப்படுமாயின் அது குற்றமாகாது குணமாம்.

உதாரணம்:—

𑌅𑌭𑌿𑌧𑌾𑌯 𑌤𑌦𑌾 𑌤𑌦𑌪𑍍𑌰𑌿𑌯𑌂
𑌶𑌿𑌶𑍁𑌪𑌾𑌲𑍋𑌽𑌨𑍁𑌶𑌯𑌂 𑌪𑌰𑌂 𑌗𑌤𑌃 ।
𑌭𑌵𑌤𑍋𑌽𑌭𑌿𑌮𑌨𑌾𑌃 𑌸𑌮𑍀𑌹𑌤𑍇
𑌸𑌰𑍁𑌷𑌃 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯 𑌮𑌾𑌨𑌨𑌾𑌮𑍍 ॥

அப்பொழுது சிசுபாலன் அவ்வாறான வெறுக்கத்தக்க சொற்களைச் சொல்லிப் பின்பு அளவற்ற பச்சாத்தாபத்தை அடைந்து, உம்மிடத்தில் பிரியமுள்ளவனாய்க் கோபங்கொண்ட உமக்கு வெகுமதிசெய்யவிரும்புகிறான்.

இனி வேறுபொருள்:—

அப்பொழுது சிசுபாலன் அவ்வாறான வெறுக்கத்தக்க சொற்களைச் சொல்லி, பின்பு அளவற்ற கோபங்கொண்டவனாய், கோபங்கொண்ட உம்மிடத்தினின்று பயமற்றவனாய், இங்கே வந்து (கோபத்தை) உபயோகிக்க விரும்புகிறான்.

இவ் விருபொருளும் ஒன்றோடொன்று முரணாகவுள்ளவையாயினும், சந்தி விக்கிரஹம் என்னும் இரண்டுபாயங்களையும் செய்யத்தலைப்பட்ட தூதன்கூற்றாதலால், ஸந்திப்பொருளே பயக்குமாறு கூறின், தம்மரசனது (சிசுபாலனது) எளிமை கண்ணனுக்கு அறியக்கிடக்குமெனக்கருதி இருபொருளும் பயப்பக்கூறினான் எனக் கொள்ளத்தகும். ஆதலால் (ஈண்டு) இது 'விருத்தம்' என்னும் குற்றமாகாது குணமாம்.

14. அப்பிரயோஜகம்.

𑌅𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌕𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌵𑌿𑌧𑌾𑌯𑌕𑌮𑍍 ।
𑌶𑍍𑌲𑌾𑌘𑌾𑌵𑍇𑌶𑍋𑌕𑍍𑌤𑍌 𑌵𑌕𑍍𑌤𑍃𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌗𑌣𑍍𑌯𑌤𑍇 ॥ ॥

ஒருவிசேடமும் குறித்தலின்றி வாளாகூறப்படும் சொல் 'அப்பிரயோஜகம்' என்னும் குற்றமாமென்று முன் கூறப்பட்டது. அங்ஙனம் கூறியதனுல் ஏதேனும் பொருட்சிறப்பு உளதாயின் அது குற்றமாகாது, குணமாம்.

உதாரணம்:—

தே க²ட்³க³ஶ்யாமலாகாஶமுத்பேதுர்மஹர்ஷய: ।
ஸாக்³ரம் வர்ஷஸஹஸ்ரம் ஸ தபஸ்தேபே மஹாமநா: ॥

அந்த மஹருஷிகளும் கத்திபோற் கருநிறம்வாய்ந்த வானில் எழுந்து (சென்றனர்.)

அந்த நன்மனமுடைய பெரியார் ஆயிரம் ஆண்டுகள் முழுமையும் தவம்புரிந்தார்.

இங்கே, வானிற்குக் 'கத்திபோற் கருநிறம்வாய்ந்த' என்னும் அடைமொழி புணர்த்திருப்பது வேண்டாகூறலாம்; என்னை ? வான் கருநிறமுள்ளதாகவே யாண்டும் தோன்றுதலானும் வேறுநிறமுள்ளதாக எஞ்ஞான்றும் தோன்றுதலின்மையானும். இங்ஙனமே, 'ஆயிரமாண்டு தவம்புரிந்தார்' என்பதே அமைந்திருப்ப, 'ஆயிரமாண்டு முழுமையும் தவம்புரிந்தார்' என்பதும் வேண்டாகூறலாம். என்னை ? ஈண்டு 'முழுமையும்' என்னும் சொல்லால் ஒருவகையினும் பொருட்சிறப்புப் பெறப்படாமையின். ஆயினும், இவை முறையே எழுந்து செல்லப்பட்ட வானின் மிக்க சேண்மையையும் தவம்புரிந்தகாலத்தின் மிக்க நெடுமையையும் காட்டுதற்கு வந்தனவாதலிற் குணமாயின.

15. தேசியம்.

யத³வ்யுத்பத்திமத்³தே³ஶ்யம் தி³வ்யம் நாம நிவேஶ்யதே ।
மஹாகவிநிப³த்³த⁴ம் தத் ஸத்³வ்யுத்பத்தி கு³ணீப⁴வேத் ॥ ௧0௪ ॥

இலக்கணவழக்கின் வழிப்படாது வழங்கும் சொற்களை எடுத்தாளுதல் 'தேசியம்' என்னும் குற்றமாமென முன் கூறப்பட்டது; அவையே மஹாகவிகளால் வழங்கப்பெற்றிருப்பின் குணமாம்.

உதாரணம்:—

'பாதாலப்ரதிமல்லகல்லவிவரப்ரக்ஷிப்தஸப்தார்ணவம்।'

'பாதாளத்தையொத்த கன்னக்குழியில் புகுத்தப்பெற்ற எழு கடல்களையும் உடைய.'

'கிரணாஃ காவேரீவல்குவல்லரீசீகரகிரணாஃ'

'காவிரியின் அழகிய அலைகளின் நீர்த்திவலைகளை எறிந்து வீசுமவை.'

இங்கே, 'கல்ல' என்னும் சொல் 'கன்னம்' என்னும் பொருளிலும், 'வல்கு' என்னும் சொல் 'அழகு' என்னும் பொருளிலும், 'வல்லரீ' என்னும் சொல் 'அலை' என்னும் பொருளிலும் வழங்கப் பெற்றுள்ளன. இவை இவ்வாறு வழங்குதல் இலக்கணநெறியால் அமைந்தனவல்லவாயினும், மஹாகவிகள் அவ்வழக்கை மேற்கொண்டமையால் இது குணமாயிற்று.

16. கிராமியம்.

க்ராம்யம் வ்ரீடாவதச்லீலாமங்கலார்த்தம் ப்ரதீயதே।
தத்ஸம்வீதேஷு குப்தேஷு லக்ஷிதேஷு ந துஷ்யதி॥

அருவருக்கத்தக்க பொருளுள்ள சொற்களையும் வெட்கத்தை யுண்டாக்கும்பொருளுள்ள சொற்களையும் அமங்கலப்பொருளுள்ள சொற்களையும் வழங்குதல் 'கிராமியம்' என்னும் குற்றமா மென்று முன்பு கூறப்பட்டது. அச்சொல்வழக்கு, (1) யாண்டும் பயின்றுள்ளனவாயும் (2) சிறந்த பொருள்களால் மேற்கூறிய இழி பொருள்கள் தோன்றப்பெறுதனவாயும் (3) இலக்கணை வகையால் வேறுபொருள் பயப்பனவாயும் உளவேல் அவை குற்றமாகாது குணமாம்.

(1) உதாரணம்

தவைவ ஹிமாத்ரே: ப்ரயதாம் ததந்தரம்
ஸிதாத்ரெ யோஜயிதும் ப்ரதஸ்து।

யொஷித்ஸு தத்வீர்யநிஷேகபூமிஃ
ஸைவ க்ஷமேத்யாத்மபுவோபதிஷ்டம் ॥

(இது மன்மதனைநோக்கி இந்திரனாற் கூறப்பட்டது.)

இமயமலையின் தூய்மைவாய்ந்த புதல்வியைத் தவம்புரியும் சிவபிரானுடன் சேர்த்துவைக்க முயல்வாயாக; (ஏனென்றால்,) 'மடந்தையருள் அவர்வீரியத்தைத் தாங்கத் தகுதிவாய்ந்தவள் பார்வதீதேவியே' என்று பிரமதேவர் கூறினார்.

இங்கே, வீரியத்தைத் தாங்குதற்குரியவள் என்று கூறியது அருவருப்பைத்தரத்தக்கதாயிருப்பினும் வீரியம் எனும் சொல் உலகவழக்கிற் பயின்றுள்ளதாகலாற் குற்றமன்றிக் குணமாயிற்று.

ஒருபெரியார் பின்வருமாறு கூறுவர்:—

"ஸம்வீதஸ்ய ஹி லோகேந ந தோஷாந்வேஷணம் க்ஷமம் ।
சிவலிங்கஸ்ய ஸம்ஸ்தாநே கஸ்யாஸப்யத்வபாவநா ॥"

உலகில் பயின்றுவரும் வழக்கில் குற்றம் தேடுவது இயல்பன்று; (எங்ஙனமெனில்,) சிவலிங்கம் என்ற சொல்லைக்கூறியவழி எவனுக்காயினும், இடக்கர்ப்பொருள் நினைவுண்டாமோ?

(2) உதாரணம்

ஸாத்யாஜ்யோ யத்யபி ஜந்மபூமி
ர்போக்யா ஸம்பாதயிதும் ந ஸேவ ।
ஸமாநயேத்யஃ ஸாபிமாநீ
ஸகாம்யதாம் நஃ ப்ரதமாபிலாஷஃ ॥

ஜன்மபூமியானது நம்மால் துறக்கமுடியாததேயாயினும், அது யானைகளுக்கு வசிப்பதற்கு இயலாததாயிற்று. அபிமானமுள்ளவனும் பாக்கியமுள்ளவனும் ஆன அவனே உன்னால் (காதலித்து) அநுஸரிக்கத்தக்கவனாவான். இதுவே முதன்மையான எமது விருப்பம்.

இங்கே, ஜன்மபூமி' 'ஸம்பாய' 'ஸூஹ்ம' 'ஹரிணீ' என்னும் சொற்களுக்கு அருவருப்பைத்தரத்தக்க வேறுபொருளும் உளவேனும், முதன்முதலில் அவ்வருவருப்பாயபொருள்தோன்றாது வேறு சிறந்தபொருள்களே தோன்றுதலால், அவ்வருவருக்கும் பொருள் மறைக்கப்பட்டுவிடுகின்றமையின் இது குற்றமாகாது, குணமாயிற்று.

ஒருபெரியார் பின்வருமாறு கூறுவர்:—

"வ்யஞ்ஜகாஹாத்ஸம்வேத்ய பதார்த்தஸ்ய விஹாவநாத் ।
ஹரிணீ ஹரவத்ராதி நாவஸ்யத்யேவ ஹாஸ்யதே ॥"

சொற்கள், சற்று அருவருப்பைத்தரத்தக்க வேறுபொருள்களையும் உடையவாயிருப்பினும், கூறப்படும் சிறந்தபொருளே எளிதில் முதலில் தோன்றி அப் பிறபொருள்களை மறைத்துவிடுதலால், பகினி பகவதி முதலிய சொற்கள் இடக்கர்ப்பொருளவென்று கருதப்படாவாம்.

(3) உதாரணம்

ப்ரஹ்மாண்டகாரணம் யோம்பு நிதயே பீஜமாததௌ ।
உபாஸ்மஹே தமாத்யந்தம் தல்பே ஸேஷாஹிஸாயிநம் ॥

பிரமாண்டங்களுக்குக்காரணமான பீஜத்தை (-விதையை) எவர் நீரில் ஊன்றினாரோ அந்த, பாம்பணையில் கண்வளரும்பெருமானை வணங்குகின்றேன்.

இங்கே, அண்டம் பீஜம் என்பன அருவருப்பைத்தரும் பொருள்களைக் காட்டுபவையாயிருப்பினும், அவற்றுக்கு ஈண்டு அப்பொருளின்றி இலக்கணையால் வேறுபொருளே கொள்ளக் கிடந்தமையின் அவை குணமாயின.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.

மதுரை.

யவனர்வரலாறு.

[ஸ்ரீ. த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

[ங-அக-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

உரோமமதத்தின் அழிவு.

15 சமயக்குருக்கள் கொண்ட சபையார், உரோமருடைய சமயத்தைப்பற்றிய ஆசங்கைகள் யாவற்றையும் தெரிந்து தெளிந்தனர். 15 நிமித்திகர் முழுத்தங்களை ஆராய்ந்து தலைவருக்குச் சோதிடம் சொல்லுதல் வழக்காறு. 15 சமயக்கணக்கர் திருவேட்டிலே கயிறிட்டுநோக்கி எதிர்காலத்துப் பலாபலன்களை மொழிந்தனர். தேவராட்டியர் அறுவர் தீயை வளர்த்தனர். எழுவர் பலியிடுதல் முதலிய கிரியைகளையும் திருவிழாக்களையும் நடாத்தினர். தேவர்கள் உரோமாபுரத்தைக் காத்தனர். அரசியலைப்பற்றித் தனிக்கோலர் சமயகுரவரோடு ஆலோசியாவிடினும், அவர்க்குத் தகுந்த மரியாதைசெய்தனர்.

தலைவன் கிருசியன் 1000 ஆண்டுகளாயிருந்த இச்சமயக்கிரியைகளைக் குழப்பினான்; அஞ்ஞானமதத்துக்கே ஆதரவளித்தான். அவன் உரோமநாட்டுத்தேவதைகளின் படிமங்களை வீழ்த்தினான். அப்படிமங்களிற் சிறந்தது வெற்றித்தேவதையின்விக்கிரகம். கையில் கன்னியேந்தி உருண்டை ஒன்றின்மீதேறித் தன் பொல்லாச் சிறகை விரித்துத் தூங்கிய ஆடையணியோடு நகர்மண்டபத் தின்மத்தியில்நின்றது வெற்றித்தேவதையின் திருச்சிலை. கன்ஸ்ராந்தையின் இச்சிலையை அகற்றினன். யூலியன் அதைத் திரும்பவும் நாட்டினன்.

நாட்டுச்சமயத்தைப் பாதுகாக்கும்படி சிமாக்கஸ் என்னும் நாவலன் தலைவரை வேண்டினன். "உலகு ஒரு மாயை; நாம் புத்தியால் அதை அளக்கமுடியாது; ஆகையால் வழக்கப்படி நாம் வணங்குவோமாக" என நாவலன் சாற்றினான். கிறிஸ்தவகுரு

அம்புறேசு, உரோமசமயத்தைக் காத்தல் பாவமெனத் தலைவன் தியடோசியனிடம் வற்புறுத்தினன். உரோமமார்க்கமோ கிறிஸ்து மார்க்கமோ சிறந்ததெனத் தலைவன் மேன்மக்கட்சபையைக் கேட்டனன். மேன்மக்கள் அவன் தண்டனைக்கு அஞ்சிக் 'கிறிஸ்து சமயமே தலைசிறந்தது' என்றனர். மேன்மக்கள் பலர் கிறிஸ்தவ ராயினர். உரோமர்கோயில்கள் மூடப்பட்டன. விக்கிரகங்களுக்குப் பூசனைபுரிவோர் கண்டிக்கப்பட்டனர். காமதேவதையின் கோயில் கிறிஸ்தவப்பள்ளியாயிற்று. தெய்வங்களுக்குப் பலியிடப்படா தெனப் பிரமாணம் விதிக்கப்பட்டது. அலெச்சாந்திரியாநகரத்துச் சேராப்பிஸ்தேவதையின்கோயில் ஒன்றில்மாத்திரம் பூசைநடந்தது. அத்தேவதைக்குக் கிறிஸ்தவரும் அஞ்சினராம். சிலகாலம் சென்ற பின் தியடோசியஸ் அக்கோயிலையும் இடிக்கச்சொன்னான். நீலநதி பெருக்கெடாதெனவும், வற்கடம் ஏற்படுமெனவும் எகிப்தியர் அஞ்சினர். கிறிஸ்தவர், கோயிலிடித்தலும் விக்கிரகங்களை வீழ்த்த லுமே தம் தொழிலாக எண்ணினர். தியடோசியஸ் இறந்து 28 ஆண்டு கழிந்தபின் உரோமசமயக்கோயில்களைக் காணவே முடியாது. கிறிஸ்துமதக்குரவர்களின் உடம்பைப் பழையகோயில் களில் புதைத்தனர். 350 வருடங்களுக்குமுன் தம்மூரில் அடக்கஞ் செய்யப்பட்டிருந்த குரவர்களின் எலும்புக்கூடுகள் பெயர்த்தெடுக் கப்பட்டுப் பைசந்தியத்தில் அடக்கஞ்செய்யப்பட்டன. கிறிஸ்து வின் சிஷ்யருடைய எலும்பு, மயிர், பல், ஆடை, அணி முதலியவற் றைக் கிறிஸ்தவர்கள் ஞாபகச்சின்னமாக வணங்கத்தொடங்கினர். விக்கிரக ஆராதனையின் நன்மையை முற்காலக் கிறிஸ்தவர் உணர்ந் திலர். பிற்காலக் கிறிஸ்தவர் போலிக்குருமாரின் ஞாபகச்சின்னங் களை வணங்கத்தொடங்கினர். குரு ஒகஸ்தின் செய்த அற்புதங் கள் உண்மையானவைகளெனக் கூறினர். பிறமதத்தோரை மூட ரென இழித்த கிறிஸ்தவர்கள் தாமும் அவர்களைப்போல எலும்பு, தோல் முதலியவற்றைத் தொழுதனர்.

கி. பி. 395-ல் வேந்தன் தியடோசியஸ் இறந்தான். அவன் மகன் ஆர்க்காடியஸ் கீழைத்தேசத்தையும் கனோறியஸ் மேற்குப்

பாகத்தையும் ஆண்டனர். ஆர்க்காடியஸ் தன் தோழன் ரூபினஸ் என்போனுடைய மகளை மணந்தான். அமைச்சர் சிலர் ஆர்க்காடியஸ் தன் மனைவியை வெறுத்தானென்றெண்ணி யூடோச்சியா என்னும் சர்மானியப்பெண் ஒருத்தியை வேந்தனுக்கு மனைவியாக அளித்தனர். ஸ்ரிலிச்சியோ அரசியலைநடாத்தி ரூபினஸ் என்பவனைக் கொல்வித்தான்; அவன் உடம்பின்மீதேறி உழக்கி வலதுகையை வெட்டி வீதிதோறும் காட்டிச்சென்றனர்.

கி. பி. 398-ல் கனோறியனுக்கு எதிராக ஆபிரிக்கதேசாதிபதி எழுந்தான். அவன் பெயர் கில்டோ. கில்டோ தன்னுடைய 70,000 வீரரோடு சென்று, 'வேந்தனுடையவீரரைத் தொலைப்பன்' என்றான். கில்டோவினுடைய கொடிவீரன்கையில் கனோறியனுடைய படைத்தலைவன் அடித்தான். கொடிவீரன் தலைகுனியப் பகைப்படைவீரர் யாவரும் தலைவணங்க, இருகட்சிப்படைவீரரும், "கனோறியஸ் என்பவனே நீடூழி வாழ்க" எனக் கத்தினர்.

கோத்தர்வேந்தன் அலாறிக்கு.

கொத்தர் திறைகேட்டுக் கிரேக்கநாட்டுக்குட் புகுந்தனர்; ஆடவரை அடிமையாக்கினர்; பெண்டிரைப் புணர்ந்தனர். கொத்தர் வேந்தன் அலாறிக்கு கிறிஸ்தவனாதலின் யவனர்கோயில்கள் இடிபட்டன. ஸ்ரிலிச்சியோ அலாறிக்கை எதிர்த்தான். அலாறிக்கு நழுவிச்சென்று இத்தாலியாநாட்டினுள் புகுந்தான். கி. பி. 403-ல் 1000 வீரரையும் அலாறிக்கென்பவனின் மனைவியையும் ஸ்ரிலிச்சியோ சிறையாக்கி வெற்றிவிழாக்கொண்டாடினான். விலங்கு வேட்டமும் வாட்போரும் நிகழ்த்தப்பட்டன. கிறிஸ்தவ குரு ஒருவன் களத்தில் குதித்து வாட்போரை நிறுத்தும்படி கதறினான். காட்சிகாணச் சென்ற சனங்கள் அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள். தனிக்கோலன் கனோறியஸ் காட்சியை நிறுத்தினான். அவன் றுவன்னாக்கோட்டையில் காலத்தைக் கழித்தான்.

ஹூணரும் சர்மானியரும் வண்டலரும் இத்தாலியாநாட்டில் சூறையாடினர். படைத்தலைவன் ஸ்ரிலிச்சியோ வண்டலரை அடித்துக் கலைத்தான். ஆர்க்காடியஸ் அலாறிக்கோடு நட்புக்கொண்டாடினான்; படைத்தலைவன் ஸ்ரிலிச்சியோவைக் கொல்வித்தான். இதை,

அறிந்த அலர்றிக்கு தனக்கு நாலாயிரம் எடை பொன் கொடுத்து விட்டால் உரோமாபுரத்தைச் சூறையாடுவதாகச் செப்பினன். கொத்தர் உரோமாபுரியை முற்றுகையிட்டுநின்றனர்.

அக்கால மேன்மக்கள் அரசியலைப்பற்றிச் சிந்தித்திலர். உண்டுடுத்து ஊடிக் கூடிக் களித்தலே இம்மைவாழ்வின் சிறந்த நோக்கமென எண்ணினர். அடிசிற்றொழிலாளர் நூற்றுக்கணக்காயினரைக்கொண்டு மேன்மக்கள் பணிசெய்வித்தனர்; அடிமைகள், வெந்நீராக்கச் சுணங்கினால் கசையடிகொடுத்தார்கள். மேன்மக்கள் மீன் அணில் குருவி முதலியவற்றை நிறுத்து வாங்கினர். முகமன் கூறுவோர் மேன்மக்கள்வீட்டில் விருந்துண்டனர். உரோமர் கல்வியை வெறுத்துக் கவருடலை மிக விரும்பினர். உரோமர் முழுத்தம்பார்ப்பதிலும் சாத்திரங்கேட்டலிலும் முனைந்தனர். இக்காலத்தில் பல்வேறு தேயத்துத் தீயோரும் உரோமாபுரத்தில் உலாவினர்.

அளவுகடந்து குடிக்கும் கல்லியரும் தந்திரமிக்க கிரேக்கரும், முரட்டு யூதரும் எகிப்தியரும் சிரியாநாட்டுத் தூர்த்தரும் உரோம நாட்டுக் குடிகளெனத் திரிந்தனர். கீழ்மக்களின் உணவின் பொருட்டு அரசாங்கத்தாரால் தானியம் அளிக்கப்பட்டது. அரசாங்கத்தினரிடம் அப்பம்வாங்கும் பிரசை ஒவ்வொருவனும் உத்தரவுச்சீட்டுக் கொண்டுசெல்லவேண்டும். அந்நாட்டில் வெந்நீராடுவோருக்கு 16,000 தொட்டிகள் நிறுவப்பட்டன. தொட்டிகளில் அடிமைகள் பணிசெய்தனர். எளிய கீழ்மக்கள் கந்தைத்துணியுடுத்துக் கடைவீதிகளில் உலாவினர். தூர்த்தர் மதுக்கடைகளிலும் வரைவின்மகளிருடைய வீடுகளிலும் தம் காலத்தைக் கழித்தனர். மழையையும் காற்றையும் கவனியாமல் கீழ்மக்கள் வேடிக்கைபார்க்கச்சென்றனர்.

இக்காலத்தில் தேர்கடாவுநர் 3600 பேரும் விறலியர் 3000 பேரும் பொதுசனங்கள் 60,000 பேரும் உரோமாபுரத்தில் வாழ்ந்தனராம். கணிதவல்லோன் அம்மோனியஸ் என்பான் உரோமா

புரியின் மதில் 21 மயில்நீளமுடையதெனவும் உள்நகரில் 48,382 வீடுகள் இருந்தனவெனவும் கணக்கிட்டான். கொத்தர் நகரைச் சூழ்ந்துநின்றனர். ஸ்ரீலிச்சியோவின் கைம்பெண் கொத்தரோடு பேசினளாகத் தலைதிருகப்பட்டாள். நகரின் உணவுப்பண்டம் குறைந்தது. தாய்மார்கள் தம் குழந்தைகளைத் தின்றனர். பின்னர் 50,000 பொற்காசும், 30,000 வெண்பொற்காசும், 4000 பட்டாடையும், 3000 சிவப்புப்புடவையும், 3000 நிறைமிளகும் பெற்றபின் அலாறிக்கு சமாதான உடன்படிக்கை எழுதினன். அவன் தன் வீரரைச் சூறையாட விடவில்லை. பின்பு தன்னை உரோமநாட்டுப் படைத்தலைவனுக்கும்படி கேட்டனன்.

கனேறியஸ் 6000 வீரரைக்கொத்தரை எதிர்க்கும்படிஏவினன். அவ்வீரர்கள் போரில் மாண்டனர். மேன்மக்கட்சபையார், இன்ன சந்து என்னும் கத்தோலிக்கக் குருவைச் சமாதானம்பேசப் போக்கினர். அவனுடன்சென்ற தூதன் ஒலிம்பியஸ் என்பவன்காது அறுக்கப்பட்டது. அலாறிக்கு உரோமாபுரியிற் புகுந்து சூறையாடினன். கி. பி. 410-ல் அலாறிக்கு ருவன்னக்கோட்டையைப் பிடிக்கப் புறப்பட்டான். கனேறியஸ் ஓடித் தப்பநினைந்தான். கனேறியனைக் காக்க 4000 வீரர் வந்து இறங்கினர். அலாறிக்கு உரோமாபுரியைத் தாக்கினன். உரோமாபுரி நாட்டப்பட்டு 1103-ஆம் ஆண்டு அழிவெய்தியது. அலாறிக்கு நிராயுதரைக் கொல்லக்கூடாதெனத் தன்வீரருக்குக் கற்பித்தான். பீற்றர் போல் என்பவருடைய கோயில்களை இடிக்கக்கூடாதென ஆணையிட்டான். கொத்தர்வேந்தன் அலாறிக்கு வயிரம் பதித்து, முத்துக் கோத்து, 365 இரத்தினம் இழைத்து ஒரு கட்டில் செய்வித்தான். அக்கட்டிலின்விலை 500,000 பொன். இதிலிருந்து அவன் கொள்ளைகொண்ட தொகையை ஊகிக்கலாம். உரோமர் தம் பெண்களைக் கூட்டிக்கொண்டு பிறநாடுகளுக்கு ஏகினர். அலாறிக்கு ஆறுநாள் களித்தபின் தென்இத்தாலி சென்று சிசிலித்தீவுக்குச் செல்லுதற்குக் கப்பலேறினன். பெரும் புயலடித்து, அவன் ஆவியைக் கொண்டுசென்றது. வேந்தன்

கனேறியனுடைய சகோதரி பிளாசிடியா பிணையாகக் கொத்தர் வசத்திலிருந்தாள். அவளை அலாறிக்கின் மைத்துனன் அட்ல்பஸ் மணந்தான்.

கி. பி. 413-ல் பிரித்தானிய தேசாதிபதி கன்ஸ்ராந்தியஸ் கொத்தரை அந்நாட்டினின்றும் துரத்தினன். ஸ்பெயின்தேசத்தில் கன்ஸ்ராந்தியஸ் உரோமரோடு பகைத்துத் தோல்வியடைந்தமையால் உயிர்துறந்தான். கொத்தர் ஸ்பானியதேசத்தை மசிமஸ் என் போனுக்கு அளித்தனர். கனேறியஸ் அவனை வென்று தொலைத்தான். கி. பி. 415-ல் கொத்தர்தலைவன் அடல்பஸ் தீவினையாளரால் கொல்லப்பட்டான். சிங்கரிக்கென்பவன் முடிபெற்று ஸ்பெயின் தேசத்தில் ஆண்டான். அடல்பஸ் தன்மக்களைக் கொன்றான். அவனுடைய மனைவி பிளாசிடியாவைக் கொத்தர் 12 மயில் நடத்திச் சென்றனர். கொத்தர் தம்முள் கலகப்பட்டுச் சிங்கிரிக்கு என்பவனைக் கொன்று வல்லியா என்பவனுக்கு முடிசூட்டினர். அக்காலத்தில் பிரித்தானியாதேசத்தையும் கல்லியாதேசத்தையும் சர்மானியர் கைப்பற்றினர்.

இங்ஙனம் உரோமர்தனிக்கோலின் இருகூறுகளுள் முதன்மையும் மேன்மையும் பெற்ற இத்தாலியா இராச்சியத்தை வேந்தன் கனேறியஸ் கெடுத்தான். அவன் தமையன் ஆர்க்காடியஸ் அக்காலத்தில் பொன்னாசனத்தில் வீற்றிருந்து, தூசணிந்த வெண்ணிறக் கோவேறுகழுதைகள் இழுக்க, இரதம் ஊர்ந்தான். அவனுடைய அமைச்சன் எற்ரேப்பியஸ் என்னுமோர் வித்திலன், நீதிநூல்களைக் கற்றிலனாயினும் நீதிமன்றத்தில் ஏறி நீதிசெலுத்தத் துணிந்தான். அன்றியும், போர்க்களத்தில் தலைமைபூண்டும் அரசியலைநடாத்தினான். இவ்வித்திலன்தான் வித்திலருள் முதன்முதல் இணைத் தலைமைப்பதவியைப் பெற்றான். இவ்வித்திலன், பொருள்நனி கொடுப்போர்க்கு உத்தியோகங்களை நல்கினான்; பின்னர் ஹூணரோடு போர்செய்து மாண்டான்.

ஆர்க்காடியஸ் தன் மகன் தியடோசியஸ் ஏழுவயதுச் சிறுவனாக்கின், தான் இறந்தபின் அவனைக் காக்கும்படி பார்சியவேந்தனை வேண்டினான். அவனுடைய மகளிர் மூவர் கந்தோலிக்கப்பள்ளிகளைச் சேர்ந்தனர். கி. பி. 421-ல் வேந்தன் இறந்தபின் அவன் மனைவி புல்கேரியா இராச்சியபரிபாலனஞ்செய்தாள். லேயந்தியஸ் என்னும் தத்துவஞானி ஒருவன் மகள் அதீனியாஸ் என்பாள் தன் சகோதரிக்கு அஞ்சி அரசியிடம் சரணடைந்தாள். இளைஞன் தியடோசியஸ் அவளைக் காமுற்றான். அவள் யூடோசியா என்னும் நாமம் புனைந்தாள்; 'பழைய ஏற்பாடு' என்னும் புத்தகத்தை எழுதினாள்; எருசலெம் நகருக்கு யாத்திரைசெய்தாள்; பின் அரசாள விரும்பினளாகப் புல்கேரியாவால் நாடுகடாத்தப்பட்டாள். இது நிற்க.

கனோறியஸ் இறந்தவுடன் அவனுடைய எழுத்தாளன் யோன் என்பவன் கொத்தரின் துணைபெற்றுத் தலைமைப்பதவியைப் பெற்றான். தியடோசியஸ் II அவனைக் கொல்லும்படி ஆடபீரஸ் என்போனை ஏவினான். ஆடபீரஸ் புயலால் எற்றுண்டு யோன்கையில் அகப்பட்டான். ஆடபீரஸ் வீரரோடு கலந்துபேசி அவர்களைத் தன்வசப்படுத்தினான். யோனின் வலக்கையை ஒடித்து அவனைக் கழுதையிலேற்றித் துன்புறுத்தியபின் சிரச்சேதஞ்செய்தான். தியடோசியஸ் இதைக் கேள்வியுற்று மகிழ்ந்தான். தெய்வத்தின் உதவியை நினைந்து நாள்முழுவதும் செபஞ்செய்தான். தன் மகன் வலந்தினியனை இத்தாலியில் அரசாளவைத்தான்

கி. பி. 425 முதல் 450 வரையும் பிளாசிடியாவும் அவள் மகன் தியடோசியனும் அரசாண்டனர். பிளாசிடியா ஏற்றியஸ் பனிவாசு என்னும் இருவரைப் படைத்தலைவராக்கினாள். பனிவாசு ஆபிரிக்கநாட்டை ஆண்டான். பிளாசிடியா ஏற்றியஸின் தூண்டு கோலுக்கிணங்கிப் பனிவாசு என்பவனை நாடுதிரும்பும்படி கட்டளையிட்டாள். இதற்கிடையில் ஏற்றியஸ், 'உன்னைக் கொல்லுவதற்கே வரவழைக்கிறாளாதலின் அவ்வேவலுக்குக் கீழ்ப்படியாதே' யெனப்

பனிவாசு என்பவனுக்குக் கடிதம் எழுதினன். பனிவாசு வண்டலர் தலைவன் கன்சரிக்கு என்பவனிடம் துணைவேண்டினன். பனிவாசு ஏற்றியஸின் தந்திரத்தையுணர்ந்து நாடுதிரும்பி அரசியிடம் மன்னிப்புக்கேட்டான்; பின்பு கன்சேரிக்கோடு போர்புரிந்து தோல்வி யடைந்தான்; அதன்பின் ரூவன்னுக்கோட்டைக்குச்சென்று அங்கே படைத்தலைவனைச்சேவித்தான். ஏற்றியனும் பனிவாசுவும் தனிப்போர் செய்தனர். அப்போரில் பனிவாசு காயப்பட்டான். அவன் அதற்குமுன் தன்மனைவியை அழைத்து ஏற்றியஸ் என்பவனைக் கொழுநனாக ஏற்கும்படி ஏவினான்.

கி. பி. 439-ல் காதாக்கோப்பட்டினம் வண்டலர்வசமாயிற்று. இக்காலத்தில் நடந்த ஓர் அற்புதம் வருமாறு:—நீரோ கிறிஸ்தவரைத்துன்புறுத்தினனாக, ஏபீசஸ்நகரில் வசித்த கிறிஸ்தவர் எழுவர் ஒரு குகையினுள் ஒளித்தனர். கிறிஸ்துவின்கிருபையால் அவர்கள் இருநூறாண்டு துயின்றனர். அவர்களை அடலியஸ் என்னும் அடிமை கண்டான். அவர்கள் துயில்நீத்தெழுந்தபின் நகரத்தோர் யாவரும் கிறிஸ்தவராயிருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டனராம். இவ்வற்புதத்தைப் பார்க்க வேந்தனும் சென்றானும். இதுபோன்ற பழங்கதையொன்று முகம்மதியசமயத்தாராலும் நம்பப்படுகின்றது.

(Huns) ஹூணர்வேந்தன் அற்றில்லா.

ஹூணர்வேந்தன் அற்றில்லா ஏற்றியஸ் என்பவனுக்குத் துணைபுரிதற்கென 60,000 படையொடு கி. பி. 431-ல் இத்தாலியாநாட்டினுள் புகுந்தான். அற்றில்லா கறுத்த மேனியன், சிறுத்த கண்ணினன், குறுகிய மூக்கினன், பரந்த தோளினன்; ஹூணரால் தெய்வமெனத் தொழப்பட்டான். அவன் சிதியநாடு தொடங்கிச் சர்மாணியநாடுவரை ஆணைசெலுத்தினன்; உரோமர்தலைவன் இயடோசியனை மும்முறை புடைத்தான்; 2100 பொற்காசு பெற்ற பின்னும் உரோம கிரேக்க நாடுகளில் சூறையாடினன்.

அற்றில்லா மரத்தால் இணைக்கப்பட்ட மாளிகையில் வீற்றிருந்து விருந்தோம்பினன். புலவர் அவன்புகழைப் பாடினர். விகடர் அவனை மகிழ்வித்தனர். அவன், உரோமதூதன் மாக்சிமின்

என்பவனை வரவேற்றுத் தன் செயலாளனுக்கு வாக்குப்பண்ணின மங்கையைத் தரும்படி கேட்டனன். எடக்கன் ஓறிஸ்ரிஸ் என்னும் இரு தூதரை வேந்தன் தியடோசியஸ் என்பவனிடம் அனுப்பினான். மொழிபெயர்ப்பாளன் வேசிலியஸ் எடக்கனைக் கிறிசாப்பியஸ் என்னும் வித்திலனுக்கு அறிமுகப்படுத்தினான். அவ்வித்திலன் அவனை அற்றில்லாவைக் கொல்லும்படி ஏவினன். எடக்கன் அதற்குஉடன்படுவான்போல் நடித்து வேசிலியனைக்கூட்டிச்சென்று அற்றில்லாவின் முன்னிலையில்விட்டு, அவனுடைய சூழ்ச்சியை வெளியிட்டான். அற்றில்லா அவனைக் கொல்லாமல் 200 பொற் காசுபெற்று விடுதலையாக்கினான்.

கி. பி. 450-ல் தியடோசியஸ் குதிரையிலிருந்து வீழ்ந்து இறந்தான். அவன் சகோதரி புல்கேறியா தலைவியாகிக் கிறிசாப்பியஸ் என்னும் வித்திலனைச் சிரச்சேதஞ்செய்வித்தாள்; அவள், 60 வயதினனான மாக்கியன் என்னும் மேன்மகனை மணந்தாள். ஏற்றியஸ் ஹூணரொடு அளவளாவி அற்றில்லாவின் தோழனானான். இதற் கிடையில் வால்லியா இறக்க, அலாறிக்கின் மகன் தியோடறிக் ஸ்பெயின்நாட்டில் வேந்தனானான். அவன் தன்மகளை வண்டலர் வேந்தனுக்கு அளித்தான். அற்றில்லா வண்டலருக்குத் துணை புரிந்தான். அவன் வலந்தினியனின் சகோதரி கனோறியாவைக் காதலிக்கிறதாக நடித்தான். கனோறியா தலைவனுடைய குடும்பத் திற் பிறந்ததால் தான் விரும்பிய தலைவனைக் காதலிக்கமுடியாது துயருற்றனள். அவள் யூசேனியஸ் என்பவனோடு கூடிக் களித்தாள். தலைவி பிளாசிடியா அதையறிந்து அவளை அவமானப்படுத்தி நாடு கடத்தினள். கனோறியா 13 ஆண்டு கதலிக்கர்பள்ளியில் வருந்தித் துயர் சகிக்கமுடியாமல் அற்றில்லாவிடம் செல்ல நினைந்தாள்; தன் மோதிரத்தைத் தன் காதலன் அற்றில்லாவினுடைய கையில் கொடுக்கும்படி ஒரு அடிமையை ஏவினள். அற்றில்லா அவளைக் காதலித்திலன்; கி. பி. 451-ல் அவன் கல்லியநாடு புகுந்தான். ஏற்றியுஸ் அவனை எதிர்க்கும்படி கொத்தர்தலைவன் தியோடறிக்கு என்பவனை ஏவினான்.

இங்ஙனம் ஹூணரும் கொத்தரும் போர்புரியநேரிட்டது. இப்போரில் கொத்தருடைய வேந்தன் தியோடறிக்கு மடிந்தான். அற்றில்லா இத்தாலியாநாட்டிற்குத் திரும்பினன். வலந்தினியன் III அற்றில்லாவுக்குத் திறையளிக்க எண்ணினன். அற்றில்லாவும் சமாதானத்திற்கு உடன்பட்டான்; மனைவியர் பலர் இருந்தபோதிலும் அவன் இடிக்கா என்னும் மங்கையை மணந்தான். அன்றிரவு அற்றில்லா இரத்தக்குழாய் வெடித்ததினால் இறந்தான். வலந்தினியன் ஏற்றியனைக் கொல்வித்தான். சின்னாள் கழிந்தபின் பெற்றோனியஸ் மச்சிமஸ் என்னும் ஒரு மேன்மகனின்மனைவியை விரும்பினன்; அவள் மறுத்ததைக் கேட்டுச் சீற்றங்கொண்டான்; அவளை முயங்குதற்கு எண்ணங் கொண்டு பலரோடு ஆலோசித்தான்; அவளுடைய கொழுநன் பெற்றோனியனோடு சூதாடி வென்று அவனுடைய கணையாழியைப் பெற்றான்; கொழுநன் தன் மனைவியை அழைக்கும்வண்ணம் அவளைத் தன் மாளிகைக்கு அழைப்பித்தான்; அவள் தன் கொழுநனுடைய கணையாழியைக் கண்டவுடன் அவனுடைய ஏவலுக்குக் கீழ்ப்படிபவளாகலின் வலந்தினியன்மாளிகைக்குச் சென்று, அங்கே தன் கற்பிழந்து துயருற்றாள். தீவினையாளர் வலந்தினியனைக் கொன்று பெற்றோனியனை வேந்தனெனத் தொழுதனர். அவன் தன் மகன் பலாடியஸ் என்பவனை இளவரசாக்கி வலந்தினியனுடைய மகளை மணஞ்செய்துகொள்ளும்படி ஏவினன். கைம்மை விரதம் காத்துத் துயரக்கடலில் மூழ்கியிருக்கும் வலந்தினியனுடைய மனைவியைப் பெற்றோனியஸ் மச்சிமஸ் புணர்ந்தான். அவள் கன்சேரிக்கு என்பவனிடம் துணைவேண்டினள். வண்டலர் வேந்தன் கன்சேரிக்கு, கடல்கடந்து உரோமாபுரத்தைத் தாக்கிச் சூறையாடித் தலைவி யூடோக்கியாவையும் மகளையும் சிறையிட்டுக் காதாக்கோப்பட்டினத்துக்கு ஏகினன். கி. பி. 455-ல் பெற்றோனியஸ் மச்சிமஸ் வண்டலரால் கொல்லப்பட்டான்; அவனுடைய படைத்தலைவன் அவிற்றஸ் அரசனானன். கொத்தர்வேந்தன் தியடறிக்கு உரோமவேந்தன் அவிற்றஸ் என்பவனோடு நட்பாயினன்.

தியடறிக்கு சிறிய உருவினன்; கூரிய மூக்கினன்; மெல்லிய உதட்டினன்; அழகிய மேனியன்: எனப் பாராட்டப்பட்டான். அவன் காலையில் தெய்வத்தை வழிபட்டபின் வேட்டையாடுவான்; சாதாரண உணவையே உண்பான்; பின் சிறிதுநேரம் உறங்குவான்; பின் கவருடுவான். அவன் சுயேவி என்னும் சர்மானியச் சாதியாரை அடக்கினான்.

கி. பி. 457-ல் மசோரியன் தலைவன் றிசிமரின் உதவியைப்பெற்று இத்தாலியில் ஆண்டான். மசோரியன் பழைய கோவில்களை இடிக்காவண்ணம் பாதுகாத்தான்; உரோமாபுரத்தில் சுத்தரோமர் குன்றுதலை அறிந்து, உரோமர் விதவைகளை விவாகஞ்செய்துகொள்ளும்படி கற்பித்தான். மசோரியன் கொத்தரோடும் ஹூணரோடும் போர்புரிந்தான்; அரசியலில் திருத்தமுறைகளைக் கொணர்ந்தான். அத்திருத்தமுறைகளைப் படைவீரர் உவந்திலர் என்பதையுணர்ந்து, மசோரியன் தன் பதவியைத் துறந்தான்.

கி. பி. 461-ல் லிபியஸ் சவரஸ் தலைவனாகினான். கொத்தர் இத்தாலியநாட்டின்மீது படையெடுக்க, மேற்பாகத்தலைவன் கீழ்ப்பாக மன்னனிடம் துணைவேண்டினன். கீழ்ப்பாகமன்னன் கன்சரிக்கு என்பவனுடைய படையை வெல்லும்படி 1113 கப்பல்களைப் பசிலிக்கஸ் என்பவனின் தலைமையில் அனுப்பிவைத்தான். கன்சரிக்கு அக்கப்பல்களைத் தீயிட்டழித்துச் சிசிலி, சாடினியா என்னும் தீவுகளைக் கைப்பற்றினான். றிசிமரின் பின் ஒலிபிரியஸ் தலைவனாயினன். அவனை ஒறிஸ்திஸ் துரத்தினான். கி. பி. 475-ல் ஒறிஸ்திஸ் தன்மகன் அகஸ்துலுஸ் என்பவனைத் தனித்தலைவனாக்கினான். படைவீரர் தம் கூலிகேட்டுப் பகைத்தெழ, அகஸ்துலுஸ் தன் பதவியைத் துறந்து, ஓடேசர் என்னும் ஓர் அன்னியனைப் படைத்தலைவனாக்கினான்.

கிறிஸ்துமதவளர்ச்சி.

அன்னியராகிய ஹூணரும் கொத்தரும் இக்காலத்தில் கிறிஸ்துமதத்தைத் தழுவினர். எகிப்துநாட்டிலும் கிறிஸ்துமதம் பரம்பிற்று.

கதலிக்கக் குரு அதனேசியஸ் எகிப்துதேசத்தில் பல பள்ளிகளை நிறுவினன். உரோமரும் அவற்றைப் பின்பற்றி இத்தாலியா தேசத்திலும்கிறிஸ்தவப்பள்ளிகளை நாட்டினர். உரோமர்கீழ்மக்கள் உணவுபெறுதற்காகப்பள்ளிகளில் வசித்தனர். போரை வெறுக்கும் கோழையரும் பள்ளிகளைச் சேர்ந்தனர். பள்ளியில் வசியாமல் சிலர் தமியராக இருந்து வானப்பிரஸ்தவாழ்க்கையை நடாத்தினர்.

கி. பி. 395-ல் சிமியன் ஸ்திலிற்றிஸ் சிரியாதேசமலையொன்றில் தவஞ்செய்தான். அவன் கற்களைக் குவித்து அதிலிருந்து ஒரு சங்கிலிபற்றி அறுபதடிஏறி ஓர் தூணின் சிகரத்தில்நின்று தவஞ்செய்தான். காற்றிலும் மழையிலும் இவ்வண்ணம் அவன் 30 வருட காலம் தூணேறிச் சிலைவைபோலேனும் தலைகுனிந்து கால்தொடும் ஆசனத்திலேனும் இருந்து தவஞ்செய்தனன். இவ்வண்ணம் தம்மைத் துன்புறுத்துவோர் பிறரைத் துன்புறுத்தப் பின்னிடுவரோ வெனப் பலர் ஆசங்கிக்கின்றனர். இத்தகையோரே கதலிக்க நியாய குழுவை நிறுவினர். அக்குழுவினர் பிற்காலங்களில் அன்னிய மதத்தோரைக் கால்கை ஒடித்து வருத்தித் தீயிலிட்டனர். கி. பி. 400-ல் உல்பியன் கொத்தர்மொழியில் பைபிளை மொழிபெயர்த்துக் கொத்தர் பலரைக் கிறிஸ்தவராக்கினன். வ்ண்டலரும் பலர் கிறிஸ்தவராயினர். கிறிஸ்தவருள் ஆறியன்கட்சியார், பரிசுத்தஆவி மகன் தந்தை யென்னும் மும்மைக்கடவுளர் இல்லையென வாதித்தனர். கி. பி. 500-ல் ஆறியன்கட்சியார் துன்புறுத்தப்பட்டனர்; விக்கிரக வணக்கமும் கண்டிக்கப்பட்டது.

மேற்குப்பாக இராச்சியம் அழிவெய்தியகாலத்தில் சீனோ அன்ஸ்ராசியஸ் யஸ்தின் என்போர் ஒருவர்பின் ஒருவராகக் கி. பி. 476-க்கும் கி. பி. 527-க்கும் இடையிட்டகாலத்தில் கீழ்ப்பாக இராச்சியத்தை ஆண்டனர். அக்காலத்தில் தியோடறிக்கு என்னும் கொத்தன் இத்தாலியநாட்டில் ஆணைசெலுத்தினன். தனிக்கோலன் லியோவின்மகன் திருஸ்கலீசியஸ் உத்தரியத்தை ஏற்றபின் தன்னைச் சீனோ என்னும் பெயரால் அழைக்கும்படி கற்பித்தான். லியோவின்

விதவை சீனோவை நீக்கித் தன் சகோதரன் பசீலியஸ் என்பவனை அரசனாக்கினாள். தன் சகோதரியைக் காதலித்த அனுசியஸ் என்பவனைப் பசீலியஸ் கொல்லமுயன்றானாக, அவனுடைய விரோதிகள் சீனோவைத் திரும்பவும் வரவழைத்தனர். சிரியாதேசத்தில் ஒரு சிற்றரசனாயிருந்த வறினாவின்மகள் அரியத்தினி என்பவளைச் சீனோ மணந்தான். சீனோ இறந்தபின் அரியத்தினி அரண்மனைக்கூலிகளுள் ஒருவனாகிய அனஸ்தாசியஸ் என்பவனுக்குத் தன்னையும் தன்ராச்சியத்தையும் ஈந்தாள். அனஸ்தாசியஸ் இத்தாலியாநாட்டிற் கொடுங்கோல்செலுத்தும் கொத்தரை வெல்லும்படி தன்னுடைய நிலப்படையையும் கடற்படையையும் ஏவினான். கொத்தர்வேந்தன் தியோடெறிக்கு ஆயிரங்கப்பல்கள் கட்டித் தன் நாட்டைக் காத்தான். அவன் குடியர் தூர்த்தர் தீவினையாளரை அடக்கிச் செங்கோலோச்சினானெனச் செப்புகின்றனர். அவன் ஆண்டகாலத்தில் தானியம் மலிந்தது. அவன் ருவன்னாக்கோட்டையில் வீற்றிருந்து, பிதியஸ் என்னும் தத்துவஞானியை அமைச்சனாக்கி, அரசியலை நடாத்தவைத்தான். பிதியஸ் அரசதுரோகஞ்செய்தானெனக் கொல்லப்பட்டான். தியோடறிக் ஆறியன்கட்சியைக் கண்டித்துக் கதலிக்கர்கட்சியைச் சார்ந்தான். தன் அமைச்சனைக் கொன்றதால் தியோடறிக்கு தன் செங்கோல் கோடிற்றென்னத் துயருற்றான். தியோடறிக்கு வயிற்றுக்கடுப்பால் இறந்தான்.

அனஸ்தாசியஸ் இறந்தபின் யஸ்தின் தலைவனானான்; அவன் கமக்காரர்குலத்திற் பிறந்து போர்த்தொழில்பயின்று பதவிகள் பெற்றுத் தலைவனாயினன்; அறுபத்தெட்டாம்வயதில் அவன் தனித்தலைவனானான்; தனித்தலைவனானகாலத்திலும் தன்பெயரை யெழுத அறிந்திலன். அவனுடைய மருகன் யஸ்தினியன் மேன்மக்கள் கீழ்மக்கள் கதலிக்கக்குருமார் என்போர் யாவரையும் தன் வண்மையால் வசப்படுத்தி முப்பத்தெட்டியாண்டு செங்கோலோச்சினான். தன் காதலி தியோடோறுவுக்கு அரசிப்பட்டத்தை யீந்தான்.

அனஸ்தாசியஸ் ஆண்டகாலத்தில் அக்காசியஸ் என்னும் ஒருவன் காட்சிச்சாலையில் உள்ள விலங்குகளைப் பராமரிக்கும் உத்தியோகம் பெற்றிருந்தான். அவனுக்கு மூன்று பெண்குழந்தைகள் பிறந்திருந்தன. அவன் இறந்தபின் அச்சிறுமிகள் மூவரும் நாடகக்கணிகையராகினர். அக்காலத்திற் கூத்தர் இருகட்சியினராகப் பிரிந்து கலகப்பட்டனர். பச்சைக்கட்சியார் இச்சிறுமிகளை ஏளனஞ்செய்தனர். நீலக்கட்சியார் அவர்களுடைய நிலைக்கு இரங்கினர். அம் மூவருள் இரண்டாவதுசிறுமியின் பெயர் தியோடோரு. அவள் தலையில் முக்காலியிட்டுத் தமக்கையின் அடிதொழுது அடிமையென நடித்தாள். சிலகாலத்தின்பின் அவள் ஆடல்பாடலை விட்டு விநோதக்கூத்துக்களை நடித்துப் புகழ்பெற்றாள். அக்கணிகையை யாவரும் கண்டு களித்தனர். காமுகர் அவளோடு கூடிக் களித்தனர். சன்மார்க்கர் அவளை வீதியிற் காண்பதே பாவமென எண்ணினர். அவள் ஏகபாலனென்னும் ஆபிரிக்க தேசாதிபதியை மணந்தபின் கிரேக்கநாட்டைவிட்டு நீங்கினள். ஏகபாலன் அவள் வீண்செலவுசெய்பவள் என அறிந்து துரத்திவிட்டான். அவள் பசிப்பிணிதாங்கமுடியாமல் தலைநகர்க்குத் திரும்பி நூல்நூற்றுச் சீவனஞ்செய்துவந்தாள். படைத்தலைவன் யஸ்தினியன் அவளைக் கண்டு மருண்டான்; தனித்தலைமைப்பதவியைப் பெற்றவுடன் தியோடோருவை அரசியாக்க எண்ணினன். உரோமருடைய அரசியற்பிரமாணங்களின்படி அவளை அரசியாக்க முடியாதென அறிந்திருந்தும், நாடகக்கணிகையை மணஞ்செய்துகொள்ளவேண்டாமெனத் தாய் அழுதுவேண்டிய போதிலும், யஸ்தினியன் தியோடோருவையே மணந்துகொண்டான். அடிமைப்பெண்கள்முதல் அமைச்சர் ஈறாக யாவரும் தியோடோருவின் அடிபணிந்தனர். இராணியின் ஒற்றர்கள் யாவரையும் ஒற்றினர். அவள் தேசாதிபதிகள் சிலருக்குச் சவுக்கடிகொடுத்தாள். அவள் கதலிக்கப் பள்ளி ஒன்று கட்டி 500 விலைமாதரை இருத்திக் கடவுள்வழிபாடுசெய்யப்பண்ணினள். அவ்வரைவின்மகளிருள் சிலர் தற்கொலைபுரிந்துகொண்டனர்; சிலர் சன்மார்க்கவழியைத்

தேடி உய்ந்தனர். கி. பி. 548-ல் இராணி தியோடோரு பற்புண்ணால் மரித்தாள். தியோடோருவும் யஸ்தினியனும் நீலக்கட்சியாரைப் புரந்து விழாக்களை நடாத்தினார். தைமாதவிழா நடந்துழித் தேசாதிபதிகள் சிலர் கொடுங்கோலோச்சிக் குடிகளைத் துன் புறுத்தினரெனச் சனங்கள் வழக்குரைத்தனர். உடனே பச்சைக் கட்சியார் அரசனுக்கு மாறாக எழுந்தனர். நீலக்கட்சியார் அரச னுக்குச் சார்பாக எழுந்தனர். அத்தருணத்தில் தீவினையாளர் எழுவரைக் கொல்லும் காட்சி நடந்தது. தீயோரிருவர் கயிறு அறுந்து தப்பியோடினர். ஒருவன் பச்சைக்கட்சியினனும் ஒருவன் நீலக்கட்சியினனுமாகலின் இருகட்சியினரும் ஒன்றுசேர்ந்து மருந் துச்சாலைகளுக்கும் கோயில்களுக்கும் தீயிட்டு, அமைச்சர்மீது வழக்குத்தொடர்ந்தனராக, யஸ்தினியன் அமைச்சர்களைப் பதவியி னின்றும் நீக்கினான். அனஸ்தாசியஸ் என்பவனுடைய மருகரிருவர் கைப்பேசியன் பொம்பி என்போர் பகைவருக்கு ஆயுதம் அளித்தன ரெனச் சிறையிடப்பட்டனர். அவர் சிலகாலத்தின்பின்பு மாளி கையினின்றும் துரத்தப்பட்டனர். சனங்கள் கைப்பேசியனைத் தலைவனாக்க எண்ணினரென யஸ்தினியன் அறிந்து ஓடித் தப்ப நினைத்தான். அச்சமயத்தில் அவன்மனைவி தியோடோரு நீலக் கட்சியாரைப் பச்சைக்கட்சியாருக்கு எதிராகத் தூண்டிப் படை சேர்த்துத் தனிக்கோலைக் காத்தனள். படைவீரர், 30,000 பொது சனங்களைக் கொன்றுகுவித்தனர். கைப்பேசியனும் பொம்பியும் தலையிழந்தனர்.

இக்காலத்தில் எகிப்துநாட்டிலிருந்து பல்வகைக்கூலமும் வீட்டுமிருகங்களும் ஆடையணிகளும் செந்நிறப்போர்வையும் தூசும் உரோம கிரேக்க நாடுகளில் இறக்குமதிசெய்யப்பட்டன. பட்டு, சீனதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. இலங்கைத்தீவு அக்காலத்தில் தப்பிரபான் எனவும் "சேரன்தீவு" எனவும் பெயர் பெற்றது. அத்தீவில் மலைநாட்டை ஆண்ட அரசனிடம் உரோமர் விலையுயர்ந்த இரத்தினங்களையும் யானைத்தந்தங்களையும் வாங்கினர்.

அம் மலைநாட்டரசனுடைய எதிரி திரிகோணமலைத்துறையைக் காத்துப் பிறதேசவணிகரிடம் சுங்கம்பெற்றானும். உரோமர் எதியோப்பியருடைய கப்பல்களிலேறி இலங்கையில் இறங்கி வாணிகஞ்செய்தனரென அறியக்கிடக்கின்றது. பார்சியரிருவர் சீனஞ்சென்று பட்டுப்பூச்சிகளைக் கொணர்ந்து யஸ்தினியனுக்கு அளித்தனரெனச் சொல்லப்படுகின்றது. தலைநகராகிய பைசந்தியத்தில் பட்டுநூற்றொழில் பரம்பிற்று. யஸ்தினியன் கலைஞரையும் வித்தைவல்லோரையும் வணிகரையும் புரந்தனன். அன்னியரை அணுகவொட்டாது, 600 கோட்டைகளை எல்லைப்புறங்களில் கட்டுவித்தான். கி. பி. 529-ல் இணைத்தலைவரைத் தெரிந்தெடுக்கும் வழக்கம் தொலைந்தது. படைத்தலைவன் பலிசாறியஸ் பார்சியரை வென்றான்; பின்னர் ஆபிரிக்காகண்டத்தில் இறங்கிக் கலிமார் என்னும் கொத்தர்வேந்தனைப் புடைத்துக் காதாக்கோப்பட்டினத்தைப் பிடித்து வெற்றிவிழாக்கொண்டாடினான்.

இத்தாலியாநாட்டில் அமலசந்தா என்னும் ஒரு அழகிய பெண் அரசாண்டாள். அவள் தன் மகன் அதலாறிக்கு என்பவனுக்குக் கல்விபயிற்றும்போது ஒருமுறை அடித்தாள். அவன் சிணுங்கிச் சென்று கற்றல் தீதென்றான்; பின்னர்க் குடித்து வெறித்து உயிர் விட்டான். அவள் தன் மைத்துனன் தியோடறஸ் என்பவனுக்குத் தலைமைப்பதவியை நல்கினாள். சிலகாலம் கழிந்தபின் அவனைக் குளிக்கும் அறையில் தலை திருகுவித்தாள். கி. பி. 535-ல் பலிசாறஸ் தென் இத்தாலியாவில் இறங்கி உரோமாபுரத்துள் புகுந்தான். சனங்கள் தியடோறஸ் தகுதியற்றவனென உணர்ந்து வெற்றிக்கஸ் என்னும் படைத்தலைவனை அரசனாக்கினார்கள். வெற்றிக்கஸ் உரோமாபுரத்தைச் சூழ்ந்துநின்றான். கதலிக்கசமயகுரு நகர் வாயிலைத் திறந்துவிட எண்ணினான். பலிசாறியஸ் அக்குருவை நீக்கி வேறோர் குருவை ஏற்படுத்தினான். பலிசாறியஸ் கொத்தரை வென்றபொழுதிலும், யஸ்தினியன் அவனுக்கு ஒருபதவியும்

அளிக்கவில்லை. அக்காலத்தில் இலம்பாடியர் தானியூபிநதிவழி சென்று வடஇத்தாலியுட் புகுந்தனர். பல்கேரியர் பன்னோனிய, கிரேக்கநாடுகளில் உலாவினர்.

கி. பி. 545-ல் துருக்கர் என்னும் சாதியார் ஆசியாகண்டத்தில் மத்தியமலைகளில் வசித்தனர். அம்மலை பொன்மலையெனவும் சக்கரவாளமெனவும் சொல்லப்படும். அந்நாட்டோர், நிலம் நீர் தீ வான் வளி என்பவற்றை வணங்கினர். உரோமர் துருக்கரைச் சர்மானியரோடு போர்புரியும்படி தூண்டினர்; பின்பு பார்சியருக்கு எதிராகத் துருக்கரிடம் துணைவேண்டினர். பார்சியவேந்தன் கஸ்ரஸ் என்னும் நஷிர்வான் கி. பி. 531-ல் செங்கோல் ஓச்சினான். அவன் கல்வியையும் கமத்தொழிலையும் விருத்திசெய்தான்; யவனநூல்களையும் இந்துநூல்களையும் மொழிபெயர்த்தான்; கி. பி. 540-ல் உரோமருடைய சிரியாநாட்டைக் கைப்பற்ற எண்ணினான். படைத்தலைவன் பலிசாறியஸ் பார்சியப்போரை நடாத்தப்போனான். அவன் எதியோப்பியரிடம் துணைபெற்றான். இக்காலத்தில் எதியோப்பியர் அராபியாவின் சிலபாகத்தில் தம் ஆட்சியைச் சிலகாலம் செலுத்தினர். கொத்தர் பின்னரும் இத்தாலியில் ஆணைசெலுத்த முயன்றனராகப் பலிசாறியஸ் புலம்பெயர்ந்து இத்தாலியநாடடைந்து உரோமாபுரத்தைப் பிடித்தான். உரோமர்தலைவன் நார்சிஸ் கி. பி. 543-ல் கொத்தரையும் பிராஞ்சிய பறங்கியரையும் வென்றான். அதற்கிடையில் பலிசாறியஸ் பைசந்தியம் என்னும் தலைநகரைச் சூழ்ந்துநின்ற பல்கேரியரைத் துரத்தினான். யஸ்தினியன் யாதொரு உபகாரமும் செய்யாதபொழுதிலும் பலிசாறியஸ் அரசபக்தியிற் குன்றினானல்லன். மாசீலஸ் சேசியஸ் என்னும் இருவர் யஸ்தினியனைக் கொல்லமுயன்றனர். அதை வேந்தனுக்கு ஒற்றர் அறிவித்தனர். சேசியஸ் பலிசாறியனுடைய அடிமைகள் தன்னை அரசனைக் கொல்லும்படி ஏவினரெனச் சான்றுசொன்னான். பலிசாறியஸ்மீது வழக்குத்தொடரப்பட்டதாயினும், அவன் தப்பினான். அதன்பின்

வேந்தனும் பலிசாறியனும் இறந்தனர். யஸ்தினியன் காட்சிக்கெளிய னெனவும் கடுஞ்சொல்லனல்லன் எனவும் வெகுளியைவென்றோ னெனவும் நன்றியறிதலில்லாதவனெனவும் ஆசிரியர் கூறுப.

உரோமருடைய அரசியற்பிரமாணநூல்களையும் நீதிநூல்களை யும் யஸ்தினியன் முறைவகுத்துத் திருத்தினான். கி. பி. 531-ல் வால்வெள்ளியொன்று 20 நாள்வரை தோன்றியதெனவும், கி. பி. 539-ல் 40 நாள்வரை தோன்றியதெனவும், பின்னர்த்தோன்றிய விண்மீன் கீழ்வானையும் மேல்வானையும் அளாவிற்றெனவும் கூறுப. இத்துர்நிமித்தம் நிகழ்ந்தபின் தலைநகர் பூகம்பத்தால் இடருற்றது. அப்பூகம்பம் 40 நாள் (இடையிடையே) நிகழ்ந்தது. அப்பூகம்பத் தால் 250,000 மக்கள் மாண்டனர். கி. பி. 542-ல் தலைநகர் பிளேக்கு நோயால் வருந்திற்று. சனங்கள் பலர் 2½ நாட் சுரத்தின்பின் கன்னம் காது வீங்கிப் புண்ணுற்று இறந்தனர். அப்புண்கள் கறுத்த சீழ் கக்கின. அக்காலத்தில் சுகாதாரமுறை கையாளப் படாமையால் நோய் 50 வருடங்கள் நிலைத்தது. நாளொன்றுக்கு 5000 மக்கள் இறந்தனராம்.

[தொடரும்]

ஸ்ரீ:

இராமசெயம்.

(இராமாயணத் திருப்புகழ்.)

செந்தமிழ் 36-ஆம் தொகுதியின் 11-ஆம் பகுதி (பிரமாதிஸு புரட்டாசிமாதப்பகுதி) தொடங்கி வெளியிடப்பட்டுவந்த இராம செயத்தின் (இராமாயணத்திருப்புகழின்) யுத்தகாண்டம், செந்தமிழ் 37-ஆம் தொகுதியின் 5-ஆம் பகுதியுடன் (பிரமாதிஸு பங்குனி மாதப்பகுதியுடன்) முற்றுப்பெற்றுள்ள செய்தி செந்தமிழ்நேயர் அறிந்ததே. இராமசெயத்தில் (இராமாயணத்திருப்புகழில்) உத்தரகாண்டமும் உளதேனும் அது மிகவும் பிழைபட்டும் சிதைந்தும் காணப்படுதலால் அதனை வெளியிடமுடியவில்லை. நிற்க,

செந்தமிழ் 37-ஆம் தொகுதியின் இரண்டாம் பகுதியில் (பிரமாதிஸு மார்கழிமாதப்பகுதியில்) சுக-ஆம் பக்கத்து இராம செயத்தின் 30, 37-ஆம் பாடல்களில் விடுபட்ட அடிப்பகுதிகள், சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ரீடரான ராவ்ஸாஹிப். ஸ்ரீ. S. வையாபுரிப்பிள்ளையவர்கள், சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதியோடு ஒப்புநோக்கியனுப்பிய குறிப்பின் உதவியால் வெளியிடப்பட்டன.

அப்பால், பிள்ளையவர்கள் ஒப்புநோக்கியனுப்பிய குறிப்பின்படி, இராமசெயத்தின் 42, 43, 46-ஆம் பாடல்களில் விடுபட்ட அடிப் பகுதிகளும் பிரதிபேதமும் செந்தமிழ்நேயர்க்குபகாரமாம்படி கீழே தரப்பட்டுள்ளன.

செந்தமிழ்த்தொகுதி 37 பகுதி 1-ல் (பிரமாதிஸு கார்த்திகை மாதப்பகுதியில்),

கரு-ஆம் பக்கத்து வெளிவந்த இராமசெயத்தின் 42-ஆம் பாட்டின் 10-ஆம் வரி படுபாடு............மென்று என்றிருப்பதை, படுபாடு பாரு மென்று எனவும்,

கசு-ஆம் பக்கத்து 43-ஆம் பாட்டில் 18-ஆம் வரியில் தாளதந்தி *என்றிருப்பதை,* கானதந்தி *எனவும்,* 19-*ஆம் வரி* வாலி ழந்துபு ழை............யருமுது(?) *என்றிருப்பதை,* வாலி ழந்துபு ழைக்கைய ருமுது *எனவும்,* 21-*ஆம் வரியில்* வாறுதிர்ந்து *என்றிருப்பதை* மாறுதிர்ந்து *எனவும்,*

கஅ-ஆம் பக்கத்து 46-ஆம் பாட்டின் 2-ஆம் வரி மாமுகந் தனில்...........வாயுவிஞ் சியபோது *என்றிருப்பதை,* மாமுகந் தனி லாய வாயுவிஞ் சியபோது *எனவும்,*

அமைத்துக்கொள்ளத் தகும்.

மேலும், மேற்குறித்த 37-ஆம் தொகுதியின் கசு-ஆம் பக்கத்திற் 'பாலிருந்து குடிக்கையிலே' என்று தொடங்கும் 43-ஆம் செய்யுளின்பின் சென்னையரசாங்கக் கையெழுத்துப்புத்தகசாலைப்பிரதியில்,

வேரிய லங்கலி நுத்து தொண்டையர்
தூசுகள் தொண்டும றைத்த தொங்கையர்
வேல்விழி தொண்டும யக்கு வம்பிகள் மதியாதே
மேல்விழ வந்துபி டித்தி ணங்கிகள்
காசுதோ லந்தபின் விட்டி யம்பிகளை
மேனியின் மஞ்சள்மி னுக்கு தொண்டிகள் எவரோடுஞ்
சேருழ டம்பிகள் பட்ட றிந்தவர்
வீறுபெ றுங்கிழி யைபசு மந்தவர்
சேலைபெ றும்பொழு திற்சி னுங்கிகள் அநியாயத்
தீமைநி றைந்தவ நுட்ச வங்கிகள்
வேசிந டங்கண்ம யக்கை வென்றிரு
சீதள பங்கய பொற்ப தந்தனில் அடைவேனோ
வாரண பந்திதோ லைத்து வந்தொரு
தேவர்க ளந்தக னைக்க டிந்தபின்
மானமு றுந்திரிசி ரத்தன் விண்புக அமராடி
மாருதி சென்றுத டக்க டைந்தபின்
மேல்வரு கின்றவ ரக்கர் தம்படை
மான மழிந்துக ளைக்கில் வெஞ்சர மழைதூவி
ஆழமு ழங்கவெ டுத்த சங்கமு
மாரத முந்தறி யிட்டு வெஞ்சிலை
யானது முந்தவ றுத்து மந்திர நெறியாலே

ஆரண னம்புதோ டுத்து நின்றதி
காயனை வென்றுசி ரத்தை யுந்தளி
யாருயிர் கொண்டவி லக்கு வன்றெழ பெருமாளே.

என்பது 44-ஆம் செய்யுளாகக் காணப்படுகிறது. இது சங்கத்துப் பிரதியில் இல்லை.

செந்தமிழில் வெளிவந்துள்ளபடி, இராமசெயத்தின் 42-ஆம் செய்யுளில் அதிகாயனைவதைக்கும்படி இராமபிரான் இலக்குவனை யேவியசெய்தியும், 43-ஆம் செய்யுளில் அதிகாயனுக்குத்துணையாய் வந்த தாருகனும் காலசங்கன்முதலியோரும் அவர்தம் வேழவெம் படையும் மாண்டசெய்தியும், 44-ஆம் செய்யுளில் கும்பன் நிகும்பன் இடபன் மத்தன் முதலியோர் மாண்டசெய்தியும் கூறப்படுகின் றன. அதிகாயன் மாண்டசெய்தி கூறப்படவில்லை. தாருகன், காலசங்கன் முதலியோர் மாண்டபின் (கும்பன் நிகும்பன் முதலி யோர் மாள்வதற்குமுன்) அதிகாயன் முதலியோர் மாண்டசெய்தி இராமாயணத்துக் காணப்படுதலின் அதற்கிையைய இலக்குவன் அதி காயனைவென்ற செய்திகூறுவதாகிய 'வேரியலங்க'லென்று தொடங் கும் மேற்காட்டிய செய்யுள் 44-ஆம் செய்யுளாகவும் 'கற்றிலாதவன்' என்றுதொடங்கும் செய்யுள் முதலியவை 45-ஆம் செய்யுள் முதலி யனவாகவும் அமைத்துக்கொள்ளத்தகும். இது பின்வரும் செய்தி யாலும் வலியுறும்.

சங்கத்திலுள்ள இராமசெய ஏட்டுப்பிரதியின் இறுதியில் இராமசெயத்திலுள்ள ஒவ்வொருகாண்டத்துக்கும் செய்யுள் தொகை குறித்த இடத்து, யுத்தகாண்டத்துக்குச் செய்யுள் 100. என்று கண்டிருக்கிறது. இப்போது அச்சிட்டுமுடிந்திருப்பதில் 99 செய்யுள்களே உள்ளன. இதுகொண்டு நோக்குமிடத்துச் சங்கத்துப்பிரதியெழுதியவரால் இடையே ஒருசெய்யுள் தவறி விடப்பட்டதென்றும், அது, அதிகாயனை இலக்குவன்வதைத்த செய்திகூறுவதாகிய 'வேரியலங்கல்' என்று தொடங்கும் செய்யுளே என்றும் அறியக்கிடக்கிறது.

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

ஸ்ரீ:

மதிப்புரை.

ராவ்ஸாஹிப். வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் (G.B.V.C.) எண்பதாம் ஆண்டுநிறைவுவிழா நினைவுமலர்:—தமிழ்ப்புலத்துறையின் முற்றிய பேரறிஞராயிருந்து, நன்புலவிருந்தாக உரையும் பாட்டு மாகிய பலபல நூல்களுதவிவருதல்பற்றித் தமிழ்ப்புலவர் பெருமக்களாலும், ஆங்கிலமொழித்தேர்ச்சியால் ஆங்கிலம்வல்லுநராலும், உத்தியோகத்துறையில் கால்நடைமருத்துவ இலாகாவில் தலைவராயிருந்து வெளியிட்ட பல வெளியீடுகளால் புலனுழுதுண்ணும் வேளாண்மாந்தர்முதலியோராலும், கடமையிற் சிறிதும் தவறின்றி நேர்மையுடன் உழைப்பதுபற்றி அரசாங்கத்தாராலும் நன்கு மதிக்கப்பெற்ற திருவாளர் ராவ்ஸாஹிப் வே. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களின் 80-ஆம் ஆண்டு நிறைவுவிழா 1—8—37ல் திருநெல்வேலியில் மிகச்சிறப்பாக நடைபெற்றசெய்தி யாவரும் அறிந்ததே. அவ்விழாசம்பந்தமான அறிக்கைகளும், அன்பர்களின் பாராட்டுரைகளும், வாழ்த்துப்பாக்களும், முதலியாரவர்கள் உருவப்படமும், அவ்விழாவினை நன்குநடைபெறச்செய்த பெரியோர்களின் உருவப்படங்களும், முதலியாரவர்களைப்பற்றி அவர்களொடுபழகி அவர்களை நன்கறிந்த புலவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுதவிய கட்டுரைகளும் அவ்விழாக்கொண்டாட்ட சம்பந்தமான வரவுசெலவுகணக்கும் ஆகியவற்றை அவ்விழாக்கொண்டாட்டக் கூட்டத்தார் தொகுத்து நல்லகாகிதத்தில் கண்கவர்வனப்பிற் புத்தகவுருவில் திருத்தமாக அச்சிட்டு வெளியிட்ட நினைவுமலர் இதுபொழுது வெளிவந்துளது. இதனுள் முதலியாரவர்களைப்பற்றியும் அவர்களியற்றிய நூல்களைப்பற்றியும் அறியவேண்டுவன பலவும் தெளிவாக விரிக்கப்பட்டுள்ளன. இது, புலவர்திருநாட் கொண்டாட முற்படுவார்க்கு ஒரு மாதிரிகையாக விளங்குகிறது. இவ்விழாக்கொண்டாட்டக் குழுவினர், இவ்விழாவுக்காக அன்பர்களுதவிய நன்கொடைத்தொகையிற் செலவானதுபோக மிச்சத் தொகையை ஒரு நிரந்தரமான நிதியாக்கி, அதிலிருந்துகிடைக்கும் ஊதியத்தை, மதுரை திராவிடம் தாயுமானவர் திருநெல்வேலி இந்து

கலாசாலைமாணவருள் தமிழ்ப்புலமையடையும் ஒரு மாணவருக்கு முதலியாரவர்கள்பெயரால் பரிசுதவ முன்வந்திருப்பது பாராட்டத் தக்கது. இது, அவ்விந்துகலாசாலைமாணவர்க்குத் தமிழ்ப்பயிற்சியில் விருப்பமுண்டாக்குவதுடன் முதலியாரவர்கள்பெயர் என்றென்றும் நிலைநிற்கச்செய்வதுமாகும். இவ்வாறே ஆங்காங்குள்ள தமிழ்மக்கள் ஆங்காங்குள்ள தமிழ்ப்புலவர்களுக்குச் சிறப்பெடுப்பது, அப்புலவரைப் பாராட்டுவதோடமையாது, தமிழ்வளர்ச்சிக்குரிய செயலாவதுடன் தமிழ்த்தெய்வவழிபாடுமாகுமென்பது ஒருதலை.

---

1. பதிபசுபாசப்பனுவல், 2. அளவையட்டவணை, 3. பதிபசு பாசத் தொகை:—முப்பொருளாராய்ச்சியிற்றலைப்படுவார்க்கு இன்றியமையாதனவான இந்நூல்மூன்றும், திருத்தென்குடித்திட்டைச் சித்தாந்தவித்தியாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீ. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் ஒரு புத்தகமாக அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள், முன்னது சைவசித்தாந்தமுறைப்படி முப்பொருளியல் விளக்குவது; திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து 3-வது குருமஹாசந்நிதானம் ஸ்ரீ அம்பலவாணதேசிக மூர்த்திகளால் அருளிச்செய்யப்பட்டது. இரண்டாவதான அளவையட்டவணை யென்பது தருக்கவிஷயங்களைச் சுருக்கி விளக்குவது. இதுவும்ஷை ஸ்ரீ அம்பலவாணதேசிகமூர்த்திகளால் இயற்றப்பட்டதென்று கருதப்படுகிறது. மூன்றுவதான பதிபசுபாசத்தொகை இயற்றினர் பெயர் முதலிய விவரம் தெரியவில்லை. இது பாயிரம், பதியியல், பசுவியல், பாசவியல், அநுக்கிரகவியல், நூற்பயன்: என்ற ஆறுதலைப்பின்கீழ்ச் செவ்விய 25 குறள்வெண்பாக்களால் சைவசித்தாந்தமுடிபுகளை உரைப்பது. இவை மூன்றும் சைவசித்தாந்த சாத்திரங்கற்பவரால் முதலில் படிக்கத்தக்கவை. வேண்டுவோர் பதிப்பாசிரியர் ஸ்ரீ. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களிடம் பெறலாம்.

ஸ்ரீ:

அநுதாபக்குறிப்பு.

மதுரைநகரப்பிரமுகரும் தமிழ்வளர்ச்சியிற் பற்றுடையவரும் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவரும் சிறுபாலை ஜமீந்தாரும் ஆன ராவ்பஹதூர் ப. சி. முத்துசெட்டியாரவர்கள் நாளிது ஆடிமீ ௰௨ (25—7—1940) காலஞ்சென்றதுகுறித்து வருந்துகிறோம். இவர் உலகியலறிஞர்; சதுரர்; தாம் மேற்கொண்ட முயற்சியைக் கடைபோகமுற்றுவிக்கும் தளராத வூக்கமிக்கவர்; தோற்றப்பொலிவும் இனியமொழியும் செல்வாக்கும் உடையவர். தம் இனத்தவராலும் பொதுமக்களாலும் அரசாங்கத்தாராலும் நன்குமதிக்கப்பெற்றவர்; பல ஆண்டுகள் சென்னைச் சட்டசபையின் அங்கத்தினராயும், மதுரைக்காஆகாபோர்டின் தலைவராயும் விளங்கியவர்; மற்றும் பல பொதுஸ்தாபனங்களில் சம்பந்தங்கொண்டிருந்தவர்; ஆலயங்களிற் பல பணிகளை நடத்திவந்தவர். எதிர்பாராதவாறு இவரைப் பிரிந்து துயருறும் இவருடைய மக்கள் நட்பினர் சுற்றத்தார் முதலியோர்க்கெல்லாம் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

பத்திராசிரியர்.